தப்பிலி: 03:30

பன்னிரு கூறுகளில் அமைந்த உரைவாக்கம்.

23/5/30

" ஆவுக் காயினு மந்தணர்க் காயினும்
யாவர்க் கேனு மெளியவர்க் காயினும்
சாவப் பெற்றவரே தகை வானுறை
தேவர்க்குந் தொழுந் தேவர்களாகுவார்."

ஆ. மாணிக்கம்,
மணவழகு காரியதர்,
செவ்வாய்பேட்டை, சேலம்.

6/6/30

மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.,
ஆங்கில ஆசிரியர், முன்னீர்ப்பள்ளம், திருநெல்வேலி.

# முன்னுரை.

இப்புத்தகத்தில் பன்னிரு கூறுகளுள. அவற்றில் தமிழ்மக்கள் அறியத்தக்க உண்மைகள் பல காணப்படும். தமிழர் தங்கள் தொன்மை, மொழிச்சிறப்பு, மானம், மறை, மணம், மேலோர், அரசு, நாகரிகம் இவைபோன்றனவற்றைப்பற்றிக் கலவையில்லாத உண்மையான தமிழரின் கொள்கைகளை வேறிடம் காண்டலரிதாம். ஆதலால் இது ஆண் பெண் இருவகையாரும் படிக்கத்தக்க நூலென்பது கூறாமலே அமையும்.

25—9—’26. மு. சி. பூ.



To The Hon'ble Diwan Bahadur

**Sir T. N. Sivagnanam Pillai, B.A., Kt.,**

*The Minister for the Tamil Districts*

In appreciation of his initial efforts for the foundation of the Tamil University in Tamilaham

# பொருளடக்கம்.

---


தோற்றுவாய்-

| | | |
|---|---|---|
| | தந்தையின் வாணாள் வரலாறு .... | v— xviii |
| | வாழ்த்துப்பாக்கள் .... | xix— xxiv |
| | பிரிவுரைப் பரிவுரை வாழ்த்துப்பா .... | xxv—xxvii |
| | பிரிவுரை வாழ்த்து .... | xxviii—xxxii |
| கூறு. | | பக்கங்கள் |
| I. | நூல் வரலாறு .... | 1— 3 |
| II. | குறளின் பொருள்-இதன் புலத்தார் .... | 3— 9 |
| III. | தெய்வம் .... | 9—15 |
| IV. | தமிழ் மறை .... | 15—33 |
| V. | விருந்து .... | 33—38 |
| VI | ஒக்கல் .... | 38—41 |
| VII. | தான் .... | 42—46 |
| VIII | அரசு .... | 46—50 |
| IX. | ஆயபின், அறு தொழிலோர். | 50—55 |
| X. | மானம் .... | 56—60 |
| XI. | தவம் .... | 60—65 |
| XII. | உலகந்தழுவல் .... | 65—69 |



# தந்தையின் வாணாள் வரலாறு.

என் தந்தை பிறந்தது கொல்லம் ஆண்டு 1041, அக்ஷய வருடம், வைகாசி நாள் 12, வியாழன். ஆங்கிலக் கணக்குப்படி அதற்குச் சரியானது 1866-ம்௵ மேமீ 24௳. நாட்கோள் அத்தம். பிறந்த இடம் கால்வாய். அது என் பாட்டி வள்ளியம்மையாரின் பெற்றோர் இருந்த சிற்றூர். என் பாட்டனார் சிவசுப்பிரமணிய பிள்ளையவர்களின் ஊர் தெப்பக்குளம், அது முன்னீர்ப் பள்ளத்தின் வட பகுதி. முதல் மகனாதலின் இருமுது குரவரும் என் தந்தையை நாளொரு மேனியாக வளர்த்து வர, வழக்கப்படி அவர் ஐந்தாம் ஆண்டில் பள்ளிக்கு வைக்கப்பெற்றார். கணக்காயர் திருவாளர் செல்லப்பெருமாள் வாத்தியார். அவர் கண்டிப்புடையவர். கையெழுத்து மணி மணியாக விருக்கும், அவருடைய எழுத்துப்போன்றதே என் தந்தை எழுத்தும். அவர் ஐந்தாண்டு தமிழ்க் கல்வி கற்றுச் சில திங்களில் திருக்குறள் கடவுள் வாழ்த்துப் பத்தும் மணிவாசகப் பெருமானுக்கு மணம் பெறத் திருப்பூசை நடாத்திவரும் திருவருளாளர் பசனை முத்துச்சாமிப் பிள்ளையவர்களிடம் பாடங் கேட்டபின், ஓராண்டு வரை தருவையில் ஆங்கிலப் பள்ளிக்கூடம் வைத்து நடாத்தி வந்த என் தந்தையின் மைத்துனர் விஜய நாராயணம் திருவாளர் குற்றாலம் பிள்ளையவர்களிடம் ஆங்கிலக் கல்வி பயிலத்தொடங்கினர்

அவர் 1877 செப்டெம்பர்மீ சிந்து பூந்துறையில் தற்காலம் இந்துக்காலேஜ் என்றழைக்கப்படும் ஆங்கிலப் பாடசாலைக்கேகினர். அப்பொழுது சாமி ஐயர், பி.எ., அதன் தலைவர். சில திங்களில் அவர் அதனை விட்டு நீங்கவும் திருவனந்தபுரம் தத்துவ ஞான மிகுந்த திருவாளர் சுந்தரம் பிள்ளையவர்கள், எம்.எ., தலைமை வகித்தனர். அவருக்குப் பின் செப்பர்டு, பி.எ., என்ற மலையாளச் சட்டைக்காரர் தலைவராயிருந்தபொழுது என் தந்தைக்கு அவரிடம் பழக்கமுண்டாயிற்று. என் தந்தையின் கையெழுத்து நன்றாயிருந்தபடியால் அவர் வேண்டுகோட்கிணங்கி என் தந்தையார் ஆங்கில இலக்கண நூல்களில் அவராற் குறிக்கப்பட்ட பாகங்களை எழுதிக்கொடுக்க நேரிட்டது. 1881-ல் என் தந்தை மிடில் ஸ்கூல் சோதனையில் தேர்ந்தார். தேர்ச்சி வெளியிடப்படுமுன் என் பாட்டியினிளவல் இலக்குமணப்பிள்ளை காலஞ்சென்றனர். அவருக்கித்ததால் என் பாட்டி என் தந்தைக்கு ஆங்கிலக் கல்வி பயிற்றுவிக்க நினைத்தனள். என் தந்தையின் ஆங்கிலத் திறமையை வியந்து செப்பர்டென்பவர் என் தந்தையை அடுத்த ஆண்டில் மெட்ரிக்குலேஷன் பல்கலை முதற் பரீட்சைக்குப்போகும் வண்ணம் உயர்ந்த வகுப்பிற் சேர்த்துக்கொள்ளும்படி குறிப்பு எழுதி வைத்தனர். அவர் உப்பள சம்பந்தமான பெரிய பதவி பெற்றுப் போனபடியால் ஆறு திங்கள் தலைமை வகித்து வந்தவரும் ஆங்கிலத்திலும் உலக நூல்களிலும் தக்க திறமை வாய்ந்தவருமான திருவாளர் முத்துக் குமாரசுவாமிப் பிள்ளையவர்கள், பி.எ., என் தந்தையை ஆங்கிலத்திலும் கணக்கிலும் சோதித்து

அந்தவகுப்பிற்குத் தகுதி என்று கூறினதும், செப்பர்டு எழுதி வைத்திருந்த குறிப்பைப் பார்த்தனர். அவர் மெட்ரிக்குலேஷன் வகுப்பில் என் தந்தையைச் சேர்த்தனர். வேனிற் கால விடுமுறை கழிந்தபின் விங்க்ளேர், பி.ஏ., என்ற பரங்கிக்காரர் தலைவராயினர். அவர் சில திங்கள் கழியு முன்னமே என் தந்தையின் ஆங்கிலத் திறமையைக் கண்டு அவரிடம் அன்புற்றனர். 1882-ல் என் தந்தை மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் ஒப்பேறினர். தேர்ச்சி முடிவு தெரியுமுன்னர் என் பாட்டனார் விருப்பத்தின் படி என் தந்தை இராமநாதபுரம் வட்டகையிலுள்ள பரம்பக்குடி முன்சீபுக்கோர்ட்டில் இரண்டரைத் திங்கள் குமாஸ்தா வேலை பார்த்து வந்தனர். இதற்குக் காரணமென்னையெனில் என் பாட்டனார் அவர்களுடைய பெரிய தந்தையின் மகன் திருவாளர் மு. சு. பூர்ணலிங்கம் பிள்ளைக்கு அபிமானப் புதல்வனாகப் பெற்ற சொத்தைப்பற்றி மன்றில் வழக்கு நிகழ்ந்து அதிற் பாதிச் சொத்தே 1879-ல் கிடைக்க கிடைத்தபாதியும் வழக்குச் செலவிற்காக விற்றுக் கொடுக்கும்படி நேரிட்டதால், தலைமுறை தலைமுறையாகக் கைவசமிருந்த நன்செய் நில முழுதுந் தொலைந்தது. பாட்டனாரவர்கள் வேறு முயற்சி செய்யாது வீடடங்கி விட்டார்கள். ஆதலால் அவர்கள் உயர்தரப்படிப்பு என் தந்தைக்கு வேண்டாமென்று நினைத்தார்கள். என் பாட்டியார் கடன் கொண்டாயினும் என் தந்தை பி. ஏ. ப்பட்டம் பெற வேண்டுமென்ற உறுதியான எண்ணத்தால் 1883-மார்ச்சு மாதத்தில் என் தந்தை இந்துக்காலேஜில் எப். ஏ. வகுப்பிற் சேர்ந்தனர். அடுத்த ஆண்டும் அங்கே படித்து

எப். ஏ. பரீட்சைக்குப்போயெழுதினர். தேர்ந்து விடுவர் என்ற நம்பிக்கை அவருக்கும் அவருடைய ஆசிரியர்கட்கும், முற்றுமிருக்க நினையாதது முன் வந்து நின்றது. திரிகோண நூல் வினுக்கட்கு என் தந்தை யளித்த விடைப் புத்தகம் சோதகரிடஞ்சேரவில்லை யென்றும், அதனுல் கணக்குப்பாடத்தில் தவறி விட்டனரென்றும் தந்தி கிடைத்தது. கணக்கு வாத்தியார் என் தந்தை விடையைப் பார்த்து நூற்றுக்கைம்பது கிடைக்குமென்று சொல்லியிருக்க, அது சோதகரிடம் போகாமல் மாயமாய் மறைந்ததைக் கேட்டுவருந்தாதாரிலர். காலேஜ் தலைவர் மிக வருத்த முற்று என் தந்தை மனதைத் தேற்றினர். என் தந்தை எப்.ஏ. பரிட்சையில் கி.பி. 1885-ல் தேறினர். தேர்ச்சிவெளியாகு முன்னர் என் தந்தைக்கு ஆங்கிலக் கல்வி தொடக்கிக் கொடுத்த குற்றாலம் பிள்ளையவர் களுக்கு வதுவை உறுதிப்பட்டது. அப்பொழுது அவர்கள் களக்காட்டுத் தபாலாபீசில் தலைவராக இருந்தனர். மணத்திற்கு விடுதி நாள் கிடைக்காத தனுல் மணம் நின்றுவிடுமோவென்று உற்றுருறவினர் நினைத்த அத்தருணம் அது நிகழுமாறு என் தந்தை களக்காட்டிற்குச் சென்று இரண்டுவாரமவர்களுடைய தபால்வேலையை வகித்துப் பார்த்தனர். சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியிற் புதிதாக டாக்டர் மில்லர் பாதிரியார் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆங்கிலத்தில் தேர்ந்த முதல் மாணவனுக்கு ஒன்றிற்கு ரூ 150 பரிசு கொடுப்பதாக விளம் பரம் செய்தபடி என் தகப்பனுரும் 1886-ஜென வரியில் சாரா டக்கர் கல்லூரியில் நான்கு மணி நேரம்

நிகழ்ந்த ஆங்கிலத்திறமைச் சோதனையில் முதல்தரமாக விளங்கினமையால் ரூ 150 பரிசுபெற்று இரண்டாண்டு சென்னைக் கிறிஸ்துவ கலாசாலையில் பி. ஏ. வகுப்புக்களிற் சேர்ந்து படித்தனர். டாக்டர் மில்லர், கூப்பர், ஸ்கின்னர், பிற்றண்டிரிக் என்பவர்களின் நன்மதிப்பும்பெற்றனர். 1888 மார்ச்சு மாதத்தில் பி.ஏ. பட்டம் பெற்று மூன் திங்கள் முடிய எம்.ஏ. க்கு வாசித்து வந்தபொழுது, என் தந்தையின் உடன் பிறந்தாளாகிய செல்வி வைகுண்டத்தம்மாளுக்குத் திருவனந்தபுரம்காஷ்கிப்பர் திருவாளர் ஏ. சி. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் வரனாக ஏற்பட்டு மணம் நிகழ்ந்தது. அத்தருணம் என் தந்தை ஊருக்கு வர நேரிட்டது. எம். ஏ. படிப்பு அத்துடன் நின்றது. திருநெல்வேலி டிப்டி கலெக்டர் ஆபிஸில் மேஸ்திரட்டு கிளார்க்கு வேலையில் இரண்டரைத் திங்கள் அமர்ந்திருந்தனர். அக்காலவெல்லை கடந்ததும் பாளையங்கோட்டையிற் பல்லாண்டு நடைபெற்ற இந்து ஐஸ்கூலில் ஓராண்டு தலைமை வகித்து அதைச் செவ்வனே நடத்தினர். அப்பொழுது 1890-ல் என் தந்தையாருக்கு முதல் மணம் நிகழ்ந்தது. மணமகள் செல்வி தாயம்மை. மண நிகழ்ச்சியிடம் நெல்லையிற் கல்லத்தித் தெருவின்கணுள்ள பெண்ணகம். அவ்வமயம் என் தந்தையின் மாணவர்கள் அவர் பெயரின் முதலெழுத்துக்கள் பொறித்த தங்க மோதிரமும் வேறு பரிசில்களும் அளித்தனர். பின்னர் ஈரோடு என்றவூரில் ஏற்பட்டிருந்த டவுன் ஐஸ்கூலுக்குத் தலைவராய் அதிகச்சம்பளம் பெற்றுப்போய் மூன்று திங்கள் அவண் தங்கினர். இச்சிறு காலவளவில் அப்பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய சீர் திருத்தங்களைச் செய்து

அதனை நன்னிலைக்குக்கொண்டுவந்தனர். அப்பொழுது என் தந்தையை எட்டையபுரம் சமீன் மைனருக்கு வாத்தியாராககோர்ட் ஆப் வார்ட்ஸ் நியமித்தபடியால் அவர் 1891-மே மாதத்தில் எட்டையபுரம் சென்றனர். பதினொண் திங்கள் கழியுமுன்னர் மைனர் சென்னை நியூயிங்கடன் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு போகப் பெற்றபடியால் மூன்று மாதச் சம்பளத்தை யொருங்கே பெற்று, அரண்மனையார் விரும்பியவாறு சிலகாலம் அவண் தங்கிப் பின்னர் என் தந்தை சென்னபட்டணம் சென்றனர்.

என் தந்தையார் 1893 முதல் 1900 வரை சென்னைக் கிறிஸ்துவக் கல்லூரியில் வாத்திமை பூண்டு மில்லருடைய அன்பு பெற்று, சென்னைப் பல்கலைப் பரீட்சைகளுக்குச் சோதகராய் விளங்கினர். சென்னையில் வதிந்த ஏழு ஆண்டுகளில் தாம்ஸன் கம்பெனியாரிடமும் மாணிக்கவேலு முதலியாரிடமும் நட்பெய்தி ஆங்கிலத்திலும் தமிழிலும் பல நூல்களையாக்கி மாகாண மாணவர்கட்கு உதவி புரிந்தனர். அன்றியும், **ஞானபோதினி** யென்ற தமிழ்த் திங்கள் வெளியீட்டை எட்டாண்டுகளாகப் பீடுற நடத்தினர். திருவாளர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் பழக்கம் கிடைத்தது. இந்த வெளியீட்டாலும் புத்தகப் பதிப்புக்களாலும் என் தந்தையின் பெயர் தமிழுலகு ஆங்கில வுலகு எங்கும் பரவிற்று. பிரிட்டிஷ் தீவுகளில் மட்டுமன்றி அமெரிக்காவிலும் பிறங்கிற்று. 1899-ல் என் பாட்டனாருக்கு 60-ஆண்டு கழிந்தமையால் அதற்குரிய சடங்குகளை என் தந்தையார் சிறப்பாக நடத்தினர்.

1900-ஜனவரியில் கோயமுத்தூர் செயின்ட் மைக்கேல் காலேஜுக்கு ஆங்கில ஆசிரியர் தேவையாயிருந்தபடியால் என் தந்தை அவண் சென்றனர். என் பெரியம்மை ஒரு மகவை யீன்று அதனை யிழந்து நோய்ப் பிணிவாய்ப்பட்டபடியால் 1903-ல் என் தாய் துணை மனைவியாயினள். என் தாயாருக்கும் ஊர் நெல்லையம்பலமே. ஆயினும் மணம் நிகழ்ந்தவிடம் சங்கரநயினார் கோயில். 1904-ல் பிளேக் பரவியதால் கோயமுத்தூரை விட்டு என் தந்தை திருநெல்வேலிக்கு வர நேர்ந்தது. ஐந்தாண்டு கோயமுத்தூரிலிருந்தபொழுது என் தந்தையைத் தெரியாதவர் கிடையாது. உம்பளாம் பெற்று அவணிருந்த ஜட்ஜ் இராமசுவாமி ஐயங்கார், ஸ்கூல் இன்ஸ்பெக்டர் நாகோஜி ராவ், கலெக்டர் மவுன்சி முதலான பிரமுகர்களின் பழக்கம் அதிகரித்தது.

1905 ஜூன் மாதம் என் தந்தை இந்துக்காலேஜில் ஆங்கில ஆசிரியர் பதவி பெற்று வாத்திமை நடாத்தியபொழுது பொறாமையெனும் பாவி கிளம்பி என் தந்தைக்கு இடுக்கணிழைக்க ஆரம்பித்தனன். பொறாமையால் தலைவர் ஆங்கில ஆசிரியரொருவர் வேண்டியதில்லை என்றனர். என் தந்தை பி. ஏ. பட்டம் பெற்றுப் பதினேழு ஆண்டுகளாக வாத்திமை நடாத்திக் கைதேர்ந்த பின்னும், 'கலிஜியெட்' பரீட்சையில் முதலிடம் பெற்றிருந்தும், புதிய வாத்தியார் போன்று கருதப்படுமாறு தெரியப்படுத்திச் சம்பளம் அதிகம் பெறாதவண்ணம் என் தந்தை எல். டி. பரீட்சையுங் கொடுக்க வேண்டுமென்ற புது விதியும் ஏற்படுத்தப்பட்டது. உடனே என் தந்தையார் சில திங்களில் அப்பரீட்சை

யில் தேறி எல். டி. பட்டமும் பெற்றனர். என் தந்தை சீட்டுப்போட்டும் மீதப்படுத்தியும் சேமித்து வைத்த பொருளைக் குடும்பக் கடனுக்குக் கொடுத்து விட்டு கோயமுத்தூரில் தாம் ஈட்டிய ஊதியத்தைக்கொண்டு காரை வீடுகளிரண்டு ஊரில் 1905 டிசம்பரில் கட்டி முடித்தனர். சென்னையிலிருந்து தந்தி யொன்று வந்தது. அதிகமான சம்பளம் கொடுக்கப்படும் என்று கண்டிருந்தது. அதனை என் தந்தை கமிட்டியாருக்குக் காட்ட கமிட்டியார் ரூ 25 அதிகமான சம்பளம் கொடுத்தனர். பொறாமையின் சூழ்ச்சி தவறிற்று. பொறாமையாளர் விடுத்த தந்தி பொய்த்தந்தி என்று ஏற்பட்டது. அது என் தந்தை நயம்பற்றி வந்தமை யால் என் தந்தைக்குத் தெரியாமல் வந்திருக்க முடியா தென்று பிறர் சொல்லிய சொல்லை நம்பி கல்வி இலாகாத் தலைவர் அங்ஙனமே முடிவு செய்தனர். ஆதலால் என் தந்தை இந்துக் கல்லூரியை விட்டுக் **காமைசிஸ் காலேஜ்** ஒன்றைத் திருநெல்வேலியில் நிறுவி அதனைச் செவ்வனே நடத்தி வந்தனர். நடத்தி வரும்பொழுது என் தந்தைக்குத் தீங்கு விளைத்த மூவரும் திருநெல்வேலிச் சில்லாவினின்று வெளியே போகும்படி நேரிட்டது. பரங்கித் தலைவர் குறைந்த சம்பளத்தில் அதிகச் செலவு பிடிக்குஞ் சென்னைக்குச் சென்றார். அவருக்கு உறுதுணையாயிருந்த இருவரும் சுதேசிக் கலக சம்பந்தத்தில் கல்லூரியினின்று சிற்சில வாண்டுகள் வெளியேறினர். அன்னார் மீண்டும் கல்லூரி யினுட் புகுந்த வளவில் யமதருமர் இருவரையுங் கடுகி அழைத்துக்கொண்டனர். சில்லாவெங்கும் பொறு மைப் பாவிகள் தண்டனை யடைந்தனர் என்ற வாக்குப்

பரவிற்று. மனித நீதி தவறினும் தெய்வ நீதி தவற வில்லை யென்றது உலகு.

கி. பி. 1911-ம் ஆண்டு செப்டம்பர் 3-ல் என் தமையனார் சிவசுப்பிரமணிய பிள்ளை பிறந்தனர். பிறந்த மூன்றாந் திங்களில், அதாவது 1911 முடிவில், வயது முதிர்ந்த என் பாட்டியார் காலஞ்சென்றனள். அன்பும் ஆற்றலும் மிகுந்த அம்மையாருக்குக் கடைசிக் கடமைகளைச் செலுத்தி விட்டு அடுத்த திங்களில் 1912 துவக்கத்தில், என் தந்தை சென்னைக்குச் சென்று காமைசிஸ் கல்லூரியை அவண் திறம்பட நிறுவினர். 1914 ஜூன் 16-ல் யான் பிறந்தேன். அப்பொழுது என் தந்தை நூறு வடித்த தமிழ் நூல்களை நல்ல தாளில் ஒரே மாதிரியாக நன்கு அச்சிட்டு ஒவ்வொரு புத்தகத்தையுந் துணிப் பயிண்டு செய்து கில்ற்று எழுத்தாற் பெயர் பொறித்தும் வெளியிட வேண்டி மாடர்ன் பிரிண்டிங் உவர்க்ஸ் என்ற அழுத்தகத்தலைவரிடம் பேசி நாட்டாள்களில் விளம்பரஞ்செய்தனர். பல்லோர் இம் முயற்சியை வியந்து ஆசிகூறும் சமயத்தில், 1914 ஆகஸ்டுத் திங்களில், பெரிய ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்தது. நாலாண்டுகள் வரை அது முடியாதநிமித்தம் தாள் விலை அதிகரித்தது, அச்சுக் கூலி பயிண்டுக்கூலி இரட்டித்தது. பெரு முயற்சி தடைப்பட்டது. அன்றுமுதல் இன்றுவரை அது நிறைவேறவில்லை. என் தந்தை 1917 வரை காமைசிஸ் கல்லூரியை நடத்தி வர, அந்த ஆண்டில் தமிழரியக்கமுண்டாயிற்று. டாக்டர் நாயர், தியாகராயச் செட்டியார் வேண்டுகோட் கிணங்கி என் தந்தை ஜஸ்டிசுக்கும் திராவிடனுக்கும் சிலகாலம் தாளா

சிரியராக இருந்தனர். யாங்கள் கோமளேசுரன் பேட்டையிற் குடியிருந்த பொழுது ஆடித் திங்கள் 11-ல் என் தங்கை செல்வி வள்ளியம்மை பிறந்தனள். பான்சிலேயென்ற மராட்டிய நண்பரொருவரின் முயற்சியால் எல்லாக் கல்லூரியிலும் என் தந்தை வேலை பார்க்கலாமென்று அவரை நன்கறிந்த கல்விப்பகுதித் தலைவர் தயாள மனதுள்ள ஸ்டோன் துரை 1918 நடுவில் உத்தரவளித்தனர். அவ்வுத்தரவு கிடைத்த காலத்தில் எனக்கும் என் தமையனுக்கும் அம்மை கண்டிருந்தது. என் தந்தைக்கும் இரண்டொரு திங்களாக வயிற்றினின்று இரத்தமும் சீதமும் வெளிப்பட்டு மிக வருத்த முற்றிருந்தனர். என் தாயாரும் என் தங்கை பிறந்தபின் உடல் நலங்குன்றி இளைத்திருந்தனள். பலவாறு வருத்தப்பட்டதால் சென்னையை விட்டேகுவதே நலமென்று எல்லோருக்கும் தோன்றிற்று. இவ்வாறு வருத்தமுற்ற எங்களுக்குச் சலிப்பின்றிக் குற்றேவல் செய்த நண்பர் ஏ ஜி. இரத்தினமென்ற கிறிஸ்துவரே. அவரை என்று மறவேம்.

1919-ம் ஆண்டு மே மாதத்தில் நாங்களனைவரும் முன்னீர்ப்பள்ளம் வந்து சேர்ந்தனம். ஜூன் மாதத்தில் என் பாட்டனார் 81 வயதில் சிவபதமடைந்தனர். என் தந்தை அவருடைய தந்தைக்கு ஈமக்கடன் செலுத்தும் புண்ணியங் கிடைத்தது. அக்டோபரில் என் சின்னம்மையும் என் தந்தையின் உடன் பிறந்தாளும் அன்றும் மறுநாளுமாகக் கொடுஞ் சுரத்திற்கு இரையாயினர். குடும்பத் துக்கம் பெருகிற்று. செலவு மிகுந்தது. வரும்படி குறைந்தது.

1920 ஜனவரியில் மதுரை அமெரிக்கன் காலேஜில் சும்ரோ பாதிரியாரென்ற அதன் தலைவர் மூன்று மாதம் மிஷன் வேலையாக இந்தியா சிலோன் எங்கும் போக நேர்ந்ததால் அம்மூன்று மாதங்களிலும் என் தந்தை அவருடைய பாடங்களைக் கற்றுக்கொடுக்குமாறு நியமிக்கப்பெற்றனர். என் சிற்றப்பாவிற்கு இரண்டாவது மணம் நடந்தபின் நாங்கள் மதுரைக்குச் சென்றோம். மார்ச்சு மாதம் கடைசியில் கல்லூரித் தலைவர் திரும்ப வந்ததும் கல்லூரி வேனிலுக்காகச் சாத்தப்பட்டது. நாங்களும் திருநெல்வேலிக்குத் திரும்பினோம்.

வேனில் விடுமுறை கழிந்ததும் கடவுளருளால் என் தந்தையாருக்கு இந்துக்காலேஜில் மறுமுறையும் ஆங்கில ஆசிரிய வேலை கிடைத்தது. ஓராண்டு அதனை என் தந்தை வகித்தார். மறுபடியும் பொறாமைப் பேய் தலையெடுத்தது. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டுதோறும் தெரிந்தெடுக்கப்படும் சிண்டிக்கேற்று என்ற குழுவில் 1921-ல் வேதியரும் விவிலியருமே நிரம்பியிருந்தபடியால் வேதியர் பொறாமை நிறைவேறியது. எக்கல்லூரியிலும் வேலை பார்க்கலாமென்று முன் 1919-ல் விடுத்த கட்டளையின் நகல் இந்துக் கல்லூரிக்கு மட்டுமே அனுப்பப்பட்டிருக்க, அக்கல்லூரியில் என் தந்தை மறுமுறை வாத்திமை நடத்துதலைப் பழைய சிண்டிக்கேற்று முன்னோக்கியிராது என்றும், ஆதலால் என் தந்தை மறுமுறை அவண் வாத்திமையிலமர்தல் ஏற்கத்தக்கதல்லவென்றும் புதுக்குழு மனப்பால் குடித்துக் கல்லூரியின் கமிட்டிக்குக் கடிதம் போக்கிற்று.

கடிதங்கிடைத்த சிறிது காலத்திற்குள் திருச்சிராப்பள்ளி எஸ். பி. ஜி. காலேஜுக்கு ரூ 200 சம்பளத்தில் ஆங்கில ஆசிரியர் வேண்டுமென்று ஏ. எப். கார்டினர், எம். ஏ., பாதிரியார் எழுதினர். என் தந்தையதனை யேற்று 1922 ஜெனவரி முதல் 1926 மே முடிய அக்கல்லூரியில் இன்றர்மீடியேற்று, பி. ஏ. வகுப்புக்களுக்கு ஆங்கிலக் கல்வி பயிற்றுவித்து வந்தனர். 1926 ஜெனவரியில் என் தந்தையின் முயற்சியால் தமிழ்ப்பல்கலைக் கழகத்திற்காகக் கூட்டம் கூடியபொழுது என் தந்தை அக்கூட்டத்தில் பேச முடியாத வண்ணந் தொண்டையடைப்பால் துயருற்றனர். அதுகாரணமாக அவர் ஏப்பிரலில் வேலைவேண்டாமென்று நீங்கினர். அவர் கல்லூரியிற் சேர்ந்தபொழுது அதன் பெயர் எஸ். பி. ஜி. கல்லூரி என்பதாம். ஈராண்டுக்குள் அப்பெயர் மாறியது. தற்காலத்தில் வழங்கும் பெயர் பிஷப் ஈபர் காலேஜ். திரிசிரபுரத்திற் றங்கிய ஐம்பது திங்களில் என் தந்தை கல்லூரியைச் சார்ந்த பார்ப்பனரல்லாத ஏனைய மாணவருக்குத் தனி ஆஸ்டல், (உண்ணுதற்கும் உறைவதற்கும் தக்க விடம்) அமைத்து நடாத்தியும், சைவ சித்தாந்த சபை உதவித் தலைவராக இருந்து பல விரிவுரைகள் நிகழ்த்தியும், திரிசிரபுரத்திலும் தஞ்சையிலும் நடந்து வரும் தமிழ்க் கழகங்கட்கும், குரவர் மாணவர் கழகங்கட்கும், எல். டி. சங்கங்கட்கும், லால்குடிக் கடுத்த பூவாளூர் சைவ சித்தாந்த சபைக்கும், திரிச்சிராப்பள்ளிக்கு அணித்தாயுள்ள பாடற் பெற்ற திருக்கற்குடி தேவாலயத் திருக்கூட்டத்திற்கும், தலைமை வகித்தும் சொற்பொழிவு நிகழ்த்தியும், புலவர், கணக்காயர் மாண்வர்,

திருக்கூட்டத்தார் முதலான பல்லோர் மனமும் உவக்கச்செய்தும், தென்னிந்திய நலவுரிமைக் கூட்டத்தாரி லொருவராயிருந்து பல விழா வமயங்களிலும் பேசி அரசியல் முறைமையைத் தெளிவுறத்தெரிவித்தும் பிறர்க் கெனவாழும் நாலுவகையிற் சிறப்பெய்தியுமிருந்தனர். மேற் குறித்த ஐம்பது திங்களில் என் தந்தையாருக் குக் கிடைத்த வூதியமே எங்கள் கல்விக்கு முதற் பொருளாயிருத்தலால் நாங்கள் திருச்சிராப்பள்ளியை யும் எங்கள் தந்தையின் நண்பர்களையும் என்றும் மறவேம்.

1926 மே முதல் நாளது வரை நாங்கள் முன்னீர்ப் பள்ளத்திலிருந்து வருகிறோம். இறைவனருளால் யானும் என் தமையனும் நெல்லையின்கணுள்ள கல்லூரிக்குச் சென்று கல்வி கற்று வருகின்றோம். என் தந்தையாரும் தொண்டைத் தொந்தரையன்னி யில் உடல் நலம் மன நலங் குன்றாது வாழ்கின்றனர். அவர் தமிழில் நான்கு புத்தகங்களும் ஆங்கிலத்தில் " தமிழ் இந்தியா " என்ற புதிய நூலும் ஆக்கியுளர். தமிழிற்கும் தமிழ் மக்களுக்கும் பாடுபடுவதே தம் கடமையாகக்கொண்டுளார். ஆந்திரப் பல்கலைக் கழகத் தின் மாணவருடைய தமிழ்த் தேர்ச்சியினைச் சோதிப் பவராக நியமிக்கப்பெற்றுளார். தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுதல் பற்றி அனுப்பப்பெற்ற வினாக்களுக்கு விடை யளித்துளார். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சப் கமிட்டியார் நெல்லைக்கு வந்த பொழுது என் தந்தையுடனுஞ் சில சங்கதிகளைப்பற்றிக் கலந்து பேசினர். ஆங்கிலத்திலும் தமிழிலும் எத்துணை என் தந்தை திறமை வாய்ந்தவரென்பதை யான் கூறுவது

மிகையாகும். அதனைப் பலவமயங்களில் என் தந்தைக்கு அளிக்கப்பட்ட பின்வரும் வாழ்த்துச் செய்யுட்களால் அறியலாம்.

என் தந்தையின் நண்பர் சிலரேயாவர். ஏனெனில் உலகில் உண்மைப் புலமையுற்றோருஞ் சிலரே. கசடறக் கல்லாத பெரிய உத்தியோகஸ்தர்களையும், ஈக்கும் ஈயாத பெரும் பொருள் படைத்த கனவான்களையும் என் தந்தை விரும்பி அணுகார். எவருடனும் வீண் பேச்சும் பேசார். பலருடைய சூழ்ச்சிகளையுந் தவறுகளையும் தாமறிந்தபோது அன்னாருடன் பேச்சைச் சுருக்குவார். ஆதலால் பழக்கமில்லாதவர் என் தந்தையாரைச் செருக்குற்றவரென்று பேசுவர். அவரோடு நெருங்கிப் பழகியவர் அக்கூற்றுச் சிறிதும் மெய்யில்லை யென்றே பகருவர்.

15உ மார்ச்சு 1927. மு. பூ. இளம்பூரணன்.

---

## I

நண்பரென்று மெல்லாரும் நண்பரோ நானிலத்திற்
கண்படைத்தா ரெல்லாரும் காவலரோ-பண்புடைத்தார்
பேரெணமுன் *நற்செயலிற் பெட்புற விளக்குறமென்
பூரணலிங்கா நீ புகல்.

ST. MICHAEL'S COLLEGE, Coimbatore, 1901. — N. V. SUNDRARAJA AYYER, B.A., L.T.

---

*பேர் + எண்ணம் + உன் (the noble sentiments of your heart.)

# வாழ்த்துப்பாக்கள்.

## II

திருத்தகு செல்வமுங் கல்வியும் அறிவும்
உரத்துயர் தவமும் உலகிற் சிறந்த
மக்களெவர்க்கும் ஒக்குமென் றிசைக்கும்
உயர்பொது நெறியா மியலெலாண் மைசயத்
தமிழ்மறை யோதி யமிழ்தருந் தண்ணுல்!
தென்மொழி யாங்கில வின்மொழி யான
முன்னீர் பருகிய நன்னீர்க் கொண்டால்!
ஒதித் தானத் துயர்தான மின்றெறவும்
எதில் துணிவை யெய்தி நாளெலாம்
அறிவு விளங்கும் ஆசிரிய ராயும்
தகைமிகு புதினத் தாட்டலை ராயும்
சிறந்து விளங்கும் அறந்தழை செம்மால்!
சீர்த்த தமிழிற செய்யுட் கோவை
விவேக விளக்கம் வாசகத் திரட்டு
தலையாங் கிலத்திற் (1) தமிழ்மொழி முதனூல்
(2) ஆங்கில மொழிப்பழமை (3) இந்தியக் காதை
(4) கல்வியும் ஆய்ச்சியும் (5) கலையுணர்ந் தோங்காம்
இங்கிலண்டு நாட் டெழில் வரலாறு
(6) சால்பு மிக்க சாக்ரட் டிசுபுவி
தொழுபிளேட் டோவும் தோற்ற நூலும்
(7) பழஞ் சட்டவழக் கறிவுச் சுருக்கம்
(8) உரோமன் சட்டப் பொழிப்பியல் புரைக்கும்
(9) புலவரிற் சிறந்த சேக்ஸ்பியர் வகுத்த

(1) Primer of Tamil Literature, (2) Analysis of English Literature, (3) History of India, (4) Studies and Critiques, (5) History of England for senior classes, (6) Socrates and Plato and Evolutional Ethics, (7) Epitome of Ancient law and Jurisprudence, (8) Digest of Roman law, (9) Shakespeare's Julius Cæsar, and Othello with Introduction and Notes.

சூலிஸ் சீசர் காதைக் குறிப்புரை
முன்னிய பன்னூல் நன்னலத் தியற்றி
மன்பதைக் கருளிய மாண்புடை வள்ளால்!
முன்ன மிந்திய வமைச்சா யிருந்த
லார்ட் ஜான் மார்லி முதலிய சான்றோர்
நன்கு மதித்த மங்கல வல்லோய்!
தென்னிந் தியாவில் கேம்பிரிட்ஜ் ஆக்ஸ்போர்ட்
முழுக்கலை யவையின கல்விகற் பிக்கக்
கல்லூரி நாட்டிய ஒல்காப் புகழோய்!
பொது ஞானப் போதினிப் புதினத்தாளை
உவப்ப நடத்திய தவச்சீர் நல்லோய்!
முனைமொழி யாந்தமிழ் தன்னுயர் வெய்த
என்று முயலும் நன்றிப் பெரும!
இச்சிறு கழக வேண்டுகைக் கிசைந்து
நின தருஞ் செயல்க ளனைத்தும் விடுத்தே
இவணபோந் தவைக்கட் டலைமைபூண் டருளி
கழக நடாத்தி விழுமிய பொருள்க
ளெவர்க்கு முணர்த்த விசைந்த நினக்கு
யாங்களு மிவணூ ரவரும் பிறரும்
கைம்மா றியற்ற வல்லுந ரல்லேம்.
ஆதலி னினக்கு நீண்ட வாயுளு
நிறைமேற் செல்வமு மறமும் புகழும்
வல்லா னருளு மெல்லா மென்மேற்
பெருக வவனடி மருமல ரிணையை
நினைந்து பல்கால் வணங்குது மன்றே.

**கோவிற்பட்டிப் பத்திவிளை கழகத்தார்.**

24-12-17 }
கோவிற்பட்டி }

(13-வது பேரவையிற் படித்துத்
தந்த வரவேற்புத் தாள்).

## III

பதியிற் சிறந்த திரிசிராப் பதியில்
மதியிற் சிறந்த புலவர் தம்முள்
மாசிலாக் கல்வியில் தேசு வாய்ந்த
காசிலாக் குணத்தான் இறைவ னருளால்
பேர்பெறு புலவன் பிறங்கிய முல்லைத்
தார்பெறு மார்பன் தமிழ்மணஞ் சான்றோன்
அன்பர் தமக்கோர் அருநிதி யாமேன்
இன்புறும் பூரண லிங்க னென்னும்
அரியநற் கவிஞன் ஆங்கில மொழியைப்
பரிவுற வுணர்ந்து புலமை வாய்ந்தோன்
செயவரு தவமெனத் திகழும் மாண்பினன்
உயர்தரு பீ.ஏ. எல்.டி. யென்னும்
பட்டம் பெற்ற பண்டித சிகாமணி!
நட்புறு மாணவர் சங்கந் தனனில்
அன்புடன் தலைமை யமர்ந்தே யருளும்
குன்றுடை நகரந் தன்னிலே வாழ்வோய்!
உத்தம, குணமுள்ள வித்தக! வென்று
எத்திசையும் புகழ் நற்றவத் தலைவ!
நின் வரவு நல்வர வாகிச்
செந்தமிழ் இனபுற் றோங்க வென்றுமே.

நலம் ! நலம் !! நலம் !!!

தி. மா. சங்கம், 5-1-1924.

இங்ஙனம்,
சங்கத்தினர்.

---

## IV

பொன்னி நல்வள மன்னிய சோணாட்
டுரிசிறப் புயரிய திரிசிர புரத்தில்
தொடக்கக் கல்வி மடுக்கும் நிலைகளில்
இணக்கா றியலும் கணக்காய ரெலாம்

கூடி நற்பயன் நாட்டியல் கழகத்து
ஆண்டு நிறைவின் ஈண்டலர் விழாக்களில்
நான்காம் விழாவில் நாம்தேர் தலைவ!
கல்விச் செல்வ! சொல்வினை புலவ!
குவளைத் தொங்கல் திவள மார்ப!
தமிழுமாங் கிலமு மிமிழிரு கண்ணெனக்
கவினை வளர்க்குங் குவியன புடையாய்!
பொறையும் ஓர்ப்பும் நிறையும் பூண்டோய்!
கொடையுயர் கல்விக் கொடைமேற் கொண்டோய்!
அஞ்சாச் சொல்வள மெஞ்சா துடையாய்!
பற்றுக பெற்றெனப் பற்றிய மேலோய்!
உற்றவர்க் குதவி யற்றங் களைவோய்!
ஏரண வியல்வைப் பானமைப் மலங்கும்
பூரணலிங்கப் புதுப் பெயர்ப் பெரியோய்!
வருக! வருக! மகிழ்வொடு வருக!
வருக! நல்லுரை தருக!
பெருகுநின் பழக்கப் பயனெமர் பெறவே!

**வாழிசிரா புரம் வாழியெம் கழகம்**
**வாழியெம் தலைவர் வாழியித் திருவிழா**
**வாழியிங் கெய்தினோர் வாழிநந் தமிழகம்**
**வாழியுல கெலாம் வாழியெம் மிறையே.**

திரிசிரபுரம், 12-4-24.

இங்ஙனம்,
**ஆரம்பக் கல்வியாசிரிய சங்கத்தார்.**

---

## V

ஏரணம் வல்ல இயற்புலவன் நெல்லைநகர்ப்
பூரண லிங்கனின் பொன்னடியைக்—காரணமா
நெஞ்சி னினைப்போர்க்கும் நேயத்தமிழ் பெருக்கும்
விஞ்சு புலமிகும் மேல்.

1925. Pandit A. SUNDRANATHAM PILLAI.

## VI

நூற்கொண்ட சங்கத்தொகை யீன்ற முத்தின்
சுடரொளியை
பாற்கொண்ட திங்களென வெண்ணகி யாம்பல் பகன்
மலரும்
சேற்கொண்ட பண்ணைசூழ் முன்னீர்ப்பள்ளச் செழும்
பதிவாழ்
மாற்கொண்ட கல்வி வளர்பூ ரணலிங்க மாணவனே.

1925. KANTHIMATHINATHA PILLAI,
*Survey Dept.*

---

## VII

புகழ் நனி வளரும் புலவோய் புகுதக !
திகழ் தமிழ் நாட்டுட் டெளிவோய் புகுதக !
தென்பாண்டி செய்தவத் தெருளோய் புகுதக !
கொன் பாவலருரை கொழிப்போய் புகுதக !
தாய்மொழித் தொண்டே தரிப்போய் புகுதக !
சேய்மொழி யாங்கிலஞ் சிறந்தோய் புகுதக !
முந்துநூல் முறையுணர் முதியோய் புகுதக !
[illegible]ந்தமர் செல்வக் கருத்தோய் புகுதக !
வென்வேற் காளை விறலோய் புகுதக !
தன்னடைந் தோர்கவி தவிர்ப்போய் புகுதக !
நாட்டுரி மைநயந் துழைப்போய் புகுதக !
வாட்டு நொய்வுள வோட்டுரவோய் புகுதக !
கல்விக் கொடையாற் களிப்போய் புகுதக !
நல்லா ருளத்துள் நயந்தோய் புகுதக !
ஒப்புர வாலுயர் உரவோய் வருக !
செப்பி லடங்காச் செம்மணி வருக !
குவளை யலங்கல் திவள வருக !
தமிழ்மொழி மழலை மிழற்றுஞ் சங்கத்

தமிழ்மொழி மாணவர் இயற்று மக்குழுவிற்
றலைமை யமைக! தண்மொழி தருக!
நிலைபெற கட்டுரை நிகழ்த்துக!
பூரணலிங்கப் புகழ்ப் பெரியோயே!

திரிசிரபுரம்,
இரக்தாட்சி, ஐப்பசி, ௩. } சங்கத்தார்.

---

## VIII

### நேரிசை வெண்பா.

காரணக் கர்த்தாவைக் கண்டு தரிசிக்கும்
பூரண லிங்கப்பிள் ளையிவர்—நேருளக்
கற்றோரைக் காத்துக் கணக்கி லளவொடு
பற்றுடன் பார்ப்பர் பரிந்து.

2 ஆங்கில பாஷை யரிய தமிழ்பாஷை
யோங்கி யுயர்ந்தவு வுத்தமராம்—பாங்குடை
பண்புடை யாளராம் பார்மன்னர் நேசராம்
வண்மையும் வாய்ந்தவராங் காண்.

3 சைவ குலத்தே தனிப்பொருளைத் தானினைத்து
மெய்ப்பொருள் காண்பராம் மேதினியில்—துய்ய
வலியார்க்கு வாய்மை தவறா வழங்கி
சலியாது செய்வர் தனித்து.

4 மனமொன்று வாக்கொன்று மாறா வயங்கும்
கனமுள கண்ணிய வானே—தினமுனைக்
காண வருவர் கணக்கி லளவொடு
சேனுள வூரி லிருந்து.

5 பத்தியொடு வாழ்வரொடு நட்புகொடு வாழ்ந்து வந்து
முத்திபெருஞ் சத்திய வுத்தமராம்—நித்த நித்தம்
எத்திசையுங் கீர்த்தியுள வெண்ணிலா மாந்தர்கள்
நத்திநத்திக் கொள்வராம் நட்பு.

பெ. துரைசாமி பிள்ளை,
நூலா சிரியர்,
உபாத்தியாயர், கரூர்.

---

# IX

## பிரிவுரைப் பரிவுரை வாழ்த்துப்பா.

### பதும பந்த வெண்பா.

*தூயநய மேயதய தோயவய லேயகய*
*லாயவிரு கண்மடவா ராசை கொளுஞ்—சேயனைய*
**பூரணலிங் கக்கோவே!** *பொன்மனைவி மக்களொடு*
*தாரணியில் வாழி தழைத்து.*

### அகவற்பா.

*நெல்லைப் பதியின் எல்லையில் தவத்தால்*
*சொல்லுயர் குலத்து நல்லொரு மகவா*
*வந்த பெரும கந்தவே ளனையாய்!*
*செந்தமிழ்ப் புலமை முந்தொரு நாவல!*
*ஆங்கில நூலில் ஓங்கிய திறலாய்!*
*தாங்குமே நாட்டுப் பாங்குயர் புலவரும்*
*அஞ்சப் பேசும் விஞ்சிய உரையாய்!*
*கஞ்ச முகத்தாய்! மஞ்செனுங் கரத்தாய்!*
*தாளாண் மையொடு வேளாண் மையுமே*
*மேலாக் கொண்ட கோளாண் குடியிற்*
*பிறந்த பெரும! சிறந்த குணத்துயர்*
*அறந்திகழ் உளத்தாய்! திறந்தெரி பாவல!*
*விம்மச் சிறந்த எம். ஏ., பி. ஏ.*
*செம்மைப் பட்டம் அம்ம பெறுவான்*
*பயிலும் பலகலை வெயிலார் கழகச்*
*செயிறில்பேர் ஆசான் ஒயில்தரு நிலைய!*
*சொல்லுயர் ஹீபர் கல்லூ ரியிலே*
*சொல்லுதல் ஆங்கில வல்லவா சானு*
*நின்ற பெருந்தகை! என்றுமெங் கழக*
*ஒன்று தலைவா நன்றருள் புரிவாய்!*

துங்கப் பூரண லிங்கக் கோவே !
இங்கெமை விடுத்துநீ உங்கள் ஊராம்
நெல்லைக் கேக ஒல்லை உளத்தவா
புல்வினை என்னச் சொல்லிய கேட்டேம்,
உள்ளந் தளர்ந்தேம், வெள்ளநீர் விழிவர
எள்ளினம் விதியை, கொள்ளு நிலைய
திருநெறிக் கழகம் பெருநிலை பெறுமுன்,
வருவதும் இதுகொலோ ? திருவரு ளோயென
வாடினம், வதங்கினம், நாடினம் நின்குணம்,
பாடினம் உன்சீர், கூடினம் ஒருவழி
அதுதான்,
அடுத்தடுத் தெமக்குப் படித்திடத் திருமுகம்
விடுத்தருள் வாயெனு மடுத்திட வன்பின்
ஆண்டு தோறும் ஆண்டு தோறும்
ஈண்டுவந் தருளி வேண்டிய செய்குவை
எனவுங் கொண்டே இனைத லகன்றனம்,
மனமுங் கொண்டு புனித ! வாழ்த்தினம்,
சேயைப் பிரிந்த தாயைப் போல
நேயக் கழகத் தாய அன்பை
மறவா திருத்தி அறவா ! தனிக்குரு !
உறவா ! வாழிநீ ! யூழி யூழியே !

வெண்பா.

சொல்லினையு நெல்வேலித் தூயநகர் செய்நோன்பால்
நல்வினைவா வந்த நலத்தகையான்—வல்லதிருப்
பூரணலிங் கக்கோமான் பூதலத்தில் வாழிநனி
சீரணவு மைந்தர் சிறந்து.

அட்சய ஆண்டு சித்திரைத் திங்கள் 2-ம் நாள் 13—4—26.

மாணவர்,
"திருநெறித்தமிழ்க்கழகம்"
திருச்சிராப்பள்ளி.

## X

என்றும் தமிழர் இயல்பை எடுத்தோதல்
நன்றென்று கண்டு நயம்படைத்தாய்—குன்றின்மேல்
இட்ட விளக்காம் எழிற்பூ ரணலிங்க
சிட்டநீ வாழ்க சிறந்து.

ஆரியரின் வேறுபட்ட அருந்தமிழர் தனிநிலையின்
சீரியலை விதந்தெடுத்துச் செப்புதல் தன் கடமையென
ஆருநனி மகிழ்சிறக்க, அறிவு புகட் டிடுமெங்கள்
நேரியல்பூ ரணலிங்க நிறைகோமான் வாழியவே.

வழிவழிச் சைவ மரபினிற் பிறந்து
மறுவிலா ஒழுக்கமும் அறிவும்
விழிவழித் தெரிக்கும் விழுப்பமும் எய்தி
மிகுநலம் தொகுக்குநற் றமிழின்

மொழிவளம் பரப்பும் முதன்மையும் படைத்த
முருகனே பூரண லிங்க
ஒளியுளம் பெருக்கும் ஒருவனே எங்கட்
குறுதுணை யாகவா ழியவே.

திரிசிரபுரம்,
14-3-26.

தி. சோ காந்திமதிநாதன்.

# XI

## பிரிவுரை வாழ்த்து.

**ஆறுசீர் ஆசிரிய விருத்தம்.**

பூமலிசீர்த் தடமலிநன் னெல்வேலி மாநகரம் புரிந்த நோன்பால்
தூமலிசீர் வாய்மையொடு குணமுழுமே தார் படிவுகொடு தோன்றிற் றென்னத்
தேமலிசீ ருயர்குடியிற் றிகழவரு கோமானே! செல் வப் பேறே!
மாமலிசீர் **பூரணலிங் கக்கோவே** மகிழ்நீ வாழி மாதோ! (1)

கம்பனெனுங் கும்பனெனுந் தமிழ்திகங் கற்றபெரு கவி வல் லோனே!
செம்பதும மாதுறையு மணிமார்பா! ஆங்கிலமுஞ் சிறக் கக் கற்றுப்
பம்புதிரைக் கடலுலகிற் பி.ஏ., எல்.டி., யென்னும் பட்டம் பெற்றாய்!
அம்புவிசொல் **பூரணலிங் கக்கோவே**! வாழிநீ அவ னிக் கம்மா! (2)

வெள்ளையரு முளத்தஞ்சி மூக்கினுனி விரல்வைத்து வியப்புக் கொள்ள
விள்ளமுறும் வெள்ளமெனப் பொருளமைய நயம் பெருகப் பயனே யோங்கத்
தெள்ளுபுக ழாங்கிலச்சொற் பொழிவாற்றும் நாவல னே! திகழ் நூல் யாருங்
கொள்ளவரும் **பூரணலிங் கக்கடலே**! வாழிநீ! குலவ மாதோ! (3)

தமிழ்நூலின் சுவையெல்லாங் கண்டுகனி யெடுத்தோ
ரும் தமிழ ரேறே !
தமிழ்வாழ்வ பெறவுழைக்குந் தனிவீரா ! தமிழ்க்கின்
பத் தாயாம் நேயா !
தமிழ்நாட்டுப் பல்கலையின் கழகத்தே அமைச்சாகித்
தாங்கும் வல்லாய் !
தமிழ் காட்டும் பூரணலிங் கக்கோவே ! வாழிநீ தழை
த்து மாதோ ! (4)

இச்சிரபு ரத்தொளிரும் ஹீபர்கல் லூரியிலே எவரும்
போற்ற
மெச்சுபெரும் ஆங்கிலஞ்சொல் ஆசிரிய நிலையினனே !
விரும்பி என்னே
உச்சிதவிவ் வூர்விட்டுன் னூராகும் நெல்வேலி யூர்க்கே
ஏக
இச்சையுளங் கொண்டனையே பூரணலிங் கக்கோவே!
என்சொல் வோமே ! (5)

எம்மூரிற் பிரியமனம் வைத்திட்டாய் நெல்வேலி யெழி
லூர்க் கேகச்
செம்மூருன் னுளப்பிரியங் கொண்டனையே சீரியா
னே ! சிறந்த நின்போல்
எம்மூரி லொருவரையாங் காண்பரிதே, என்செய்
வோம், எம்மைப் போல
உம்மூரிற் பலரிருப்பார் பூரணலிங் கக்கோவே ! உவ
க்க நீயே ! (6)

என்றாலு மெம்மைநீ யொருநாளு மறவாயென் றெண்
ணங் கொண்டும்
நின்றரு முளங்கொண்டு வந்தெமக்குக் காட்சிநனி
நேர்வை யென்றும்
மன்றாது குடைந்தளிகள் பாடுந்தார்ப் புயத்தழகா!
மதிவல் லன்பா!
கன்றாது நினைத்தெண்ணித் தெளிந்தோமாற் பூரணலிங்
கக்கோமானே!' (7)

இந்நெடுநா ளெமக்கின்பே செய்தமையைக் கணக்கிட்
டிங் கெண்ண லாமோ?
அந்நெடுவா னனைப்பயனே கருதாது செய்தனையே
அருமை ஐயா!
மன்னெடுநா ளிப்புவியி லின்னுநீ மன்னிநனி வாழி
என்னப்
பன்னெடுநாக் கொடுதுதிப்பம் பூரணலிங் கக்கோவே!
பாவி யாமே! (8)

சாற்றுபெருங் குலமகனே! குணநிதியே! தமிழ்க்கோ
மானே!
ஆற்றுபெரு நூற்கடலே! அமைந்தபெரு வாய்மை
யனே! ஆண்மை வேளே!
நோற்றுவரு தமிழ் நாட்டின் பெரும்பேறே! மனைமக்
கள் நுவலக் கூடிச்
சாற்றுதிருப் பூரணலிங் கக்கோவே! வாழிநீ தரணி
நின்றே. (9)

திருச்சிராப்பள்ளி,
குரோதன, பங்குனி, உ௯,
8—4—1926.

ம. உ. க. பஞ்சரத்தினம்,
அமைச்சர்,
திரிசிரபுரம் சைவசித்தாந்தசபை

# XII

## பிரிவுரை வாழ்த்து.

உலகமுழு தொருங்குவக்கு முயர்செழியர் நன்னாட்டின்
திலகமென நனிமிளிருந் திருநெல்லைப் பதிக்கயலின்
நிலவுறுமுன னீர்ப்பள்ள நிகழ்மேயாளாண் குலவிளக்காம்
அலகில்தமி ழாங்கிலந்தே ரறிஞர்பெரு மாமணியே !

தமிழெனப் பலருலகிற் றமருப்ப ரவரெல்லாம்
அமிழ்தனநின் போற்றமிழுக் காக்கமளித் தனரேயோ
இமிழ்திரைமா ஞாலமெலா மினிதினிதென் றிசைக்க
வருந்
தமிழருமை நின்னதெனிற் சாற்றுதன் மற்றினி
யென்னே !

ஆங்கிலத்திற் பன்னூல்க ளமைகவர்ன ராதியரும்
பாங்கினனி பாராட்டப் பண்ணுதிறம் பகருவமோ ;
ஈங்கெமர்க ளினிதுவப்ப வினியதமிழ் நூற்றொகுத்த
தாங்கருநின் றகையெடுத்துச் சாற்றுவமோ ; தக்கோ
னே !

செகப் பிரியரெனபார்ஆங் கிலமொழியிற் செப்பியுள
மிகப்பெரிய நூற்கரிய விரிபொருள்கண் டதுமன்றித்
தகப்பிரிய முடன்தமிழின் தக்கஇலக் கியவரலா
றகப்புடனாங் கிலத்துரைத்தாய் உன்சீர்த்தி உரைப்
பதுவே !

எம்மவரின் பிணிதெய்த இந்நகரத் திருந்தமிழ்ப்பல்
அம்மருவு கலைக்கழக மாற்றுமதற் கின்னல்சில
வெம்மனவர் விளைத்திடினும் வேத்தவையால் வெலப்
பெற்ற
தம்மரிய திறனென்றே உள்ளுவர்தெள் ளியருவந்தே.

## பிரிவுரை வாழ்த்து

சிரபுரத்துத் திகழ்ந்தோங்குஞ் செய்யதமிழ்ச் சங்கத்தில்
உரவமைமையொண் ணுறுப்பாகி ஒளிரும்விழிக் கிமையே போல்
பரவிருந் தினிதோம்பு பண்புறு பூரணலிங்கக்
குரவாநீ திருநெல்லைப் பதிக்கேகும் குறிப்பினையால்

மன்னியஇந் நகர்ச்சைவ மாசபைக்குத் துணைத்தலைமை
துன்னிய பூரணலிங்கத் தூயமனச் சுந்தரனே !
நின்னகராம் நெல்லைநகர் நேர்ந்திடினும் நிறையன்பால்
இன்னினிநின் எமைப்பேணி என்றென்றும்வாழியவே.

தி. மு. நாராயணசாமி பிள்ளை,
M.A., B.L., M.L.C.,
தமிழ்ச்சங்கத் தலைவர்.

திருச்சிராப்பள்ளி,
குரோதன, பங்குனி, ௨௯

# தப்பிலி.

## கூறு I.

## நூல் வரலாறு.

அருமை மக்களே, எனக்கு வயது முதிர்ந்து வருகின்றது. தளரும் பருவம் வந்துவிடும். நீங்களோ சிறுவர். என் ஆயுளில் யான் துய்த்துணர்ந்த உண்மைகளை உங்களுடைய நலத்தைக் கருதிக் கூற வெண்ணுகின்றேன். நீங்கள் கவனமாக இருந்து கேட்பீர்களாயின் அறிவு மிகும், அன்புற்று வாழ்வீர்கள், உலக வாழ்க்கையின் பயனெய்துவீர்கள்.

எனக்கு ஆறுபத்து ஆண்டுகள் கழிந்தன. யான் நெஞ்சாரத் தப்புத் தண்டாக்களில் தலையிட்டதில்லை. ஆதலால், என் நண்பர் என்னைத் **தப்பிலி** என்றழைப்பர். தப்புச் செய்யாதவன், நடுவு நிலையினின்று உண்மை பகருபவன். உலகத்திற்கு என்றும் ஒவ்வாதவனுதலின் **தப்பிலி** என்ற சொற்கு நாளடைவில் வீணன் என்று பொருள் ஏற்பட்டுளது. அது தவறேயாம். 'எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு', 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருண் மெய்ப பொருள் காண்பதறிவு' என்று பொய்யில் புலவன் கூறினமையால் சொல்லின் உண்மைப் பொருளை ஆய்தல் உங்கள் கடமையாம். யான் சிறு வயதில் மாலைப்பொழுதில் நண்பர்களுடன் மணலில் குடுகுடு

விளையாடும்போது 'சுக்கு, மிளகு, திப்பிலி, சூரிய வாணன் **தப்பிலி**' என்று சொல்லுவது வழக்கம். மக்களுக்கு நேரும் நோய்களுக்கு மருந்து திரிகடுக மாகிய சுக்கு, மிளகு, திப்பிலியாலாகும் என்று தபபுத் தவறில்லாத மருத்துவர் சூரியவாணனூர் கூறியுளார் என்பது அத்தொடரின் கருத்தாம். அருமை மக்களே, உங்கள் காலத்தில் அவ்விதமான விளையாட்டு வழக்கி லில்லை. காற்பந்து, கைப்பந்து, மட்டைப்பந்தடித்தல் போன்ற விளையாட்டுகளை நீங்கள் நன்ருக அறிவீர்கள். அதுநிற்க.

"என்னைப்பற்றி நீங்கள் அறிய விரும்பலாம். யான் பிறந்தது ஓடுகாலில். எனக்கு உறைவிடம் கடல். என் அன்னை பிணியிலி, என் தந்தை இணையிலி. என் னுடன் பிறந்தார் இருவர். நயமிலி, எனனிளவல். உவகையிலி என் தங்கை. இவ்விருவரையும் நீங்கள் அறிவீர்களாதலின் அன்னுரைப்பற்றி விரிவுரையாடி லன். எனக்குக் கலைமகளுதவியே யன்றி வேறு துணை கிடையாது. துணையுளதெனில் வியாழனே துணை. கெடுதி செய்யுஞ் சனியும் என்மீது இரக்கமுற்று எனக்கு நன்மை செய்துளான். எனக்கு நன்மையாக்கிய சனி கரியரைபன்; இவ்வரையனை நீங்கள் நேரில் பார்த்திருக்கின்றீர்கள், அவர் மீது யான் செலுத்தும் நன்றியை நீங்களும் செலுத்துவீர்களாக. 'எந்நன்றி கொன்றூர்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு', என்பது வாயுறை வாழ்த்தாதலின் அதனை மறத்தல் நலமன்று.

உங்கள் ஆயுளில் நீங்கள் கல்வி கற்றுக்கேள்வி யுற்றுப் பண்புடையர்களாய்ச் சான்றோர்களாய் அவை

முன் விளங்குபவர்களாய்ப் பிணியுறாமல் நிரப்புவாய்ப் படாமல் பிறர்க்கென வாழ்பவர்களாய்த் துலங்க வேண்டுமென்பதே என் விருப்பமாகும். திருவள்ளுவர் குறளின்படி,

> "தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
> ஐம்புலத்தாறு ஓம்பல் தலை".

உங்களுடைய முதற்கடமை இக்குறள் வழி நிற்றல். இவ்வழியே பேரின்ப வழியாம்" என்று தப்பிலி விரிவுரை நிகழ்த்தினர்.

"சரி, இதன்பொருள் நன்றாக விளங்கவில்லை. விளக்கிக் காட்டினால் நாங்கள் இயன்றவாறு அதனைக் கடைப்பிடித்து வாழ்வோம்" என்றனன் வியப்பிலி.

"நன்று, பிள்ளாய், நன்று. நீ வினவியதை விளக்கும் ஆற்றால் விளக்குவன். கொள்ளுமாற்றாற்கொள்க. பொறுப்பாயாக" என்று தப்பிலி உரைத்ததும், அவன் "அங்ஙனம் ஆகுக, அருள்க" என்று வேண்டினன்.

---

கூறு II.

## குறளின் பொருள்.

அறஞ்செய்தல் யார் யார்க்கு என்று கூறுமிடத்து ஐந்திடங் குறிக்கப்பட்டுளது. முதலில் தென்புலத்தார் அல்லது பிதிரர். உரைகாரர் பிதிரர் ஒரு தெய்வ சாதி யென்பார். இரண்டாவது தெய்வம், அல்லது

கடவுள். தெய்வ வழிபாட்டிற்கு வேண்டியன கொடுத்தல். மூன்றாவது விருந்து, அதாவது புதுமை. புதிதாக வந்தவர்கட்கு உணவளித்தல். நான்காவது ஒக்கல், அல்லது இனத்தார், சுற்றத்தார். ஐந்தாவது தான்; தன்னைக் காப்பாற்றுதலும் அறமாகும். தன்னைக் காப்பாற்றினாலன்றி ஏனையருக்கு அறஞ்செய்ய வொண்ணாது. ஆதலால், இவ்வைந்து வகைக்கு ஐந்து பாகமும் அரசனுக்கு ஒரு பகுதியுமாக ஒருவன் தன் வருவாயை ஆறு பங்காகப் பிரித்துத் தனக்கு ஆறிலொரு பாகத்தைக் கொண்டு வாழ்வது நீதி முறை யென்பர் ஆன்றோர்.

அதனைக்கேட்ட வியப்பிலிக்கு மூத்தோனாகிய பண்பிலி அரசருக்கு ஆறிலொரு பகுதி யளித்தல் இல்வாழ்வான் கடன் என்பதும் இது பற்றியோ என்று வினவ, தப்பிலி 'ஆம்' என்றனர்.

வியப்பிலி, "அன்பார்ந்த தந்தையே, தென்புலத்தார் என்பதற்குப் பிதிரர் என்றும், பிதிரர் தெய்வ சாதி யென்றும், உரைகாரர் கூறியுளாரென்று செப்பினீர்கள். புறநானூற்றிலும் "தென்புல வாழ்நர்க் கருங் கடனிறுக்கும் பொன்போற் புதல்வர்" என்ற அடிகட்கு வரையப்பட்ட வுரையில் "தென்றிசைக்கண் வாழ்வோராகிய நுங்குடியிலிறந்தோர்க்குச் செய்தற்கரிய பிண்டோதகக் கிரியையைப் பண்ணும் பொன் போலும் பிள்ளைகள்" என்றிருத்தலால், பிதிரர் இறந்த முன்னோர் என்று பொருள்படுகிறதன்றி தெய்வ சாதி யென்று கொள்ளுதல் பொருந்துமா? இறந்த முன்னோரை நினைத்து நன்றியாற்றல் தமிழ் மக்களின் கடமையே. இறந்த முன்னோர் தென்திசையி

விருப்பதாகக் கொள்ளுதல் எங்ஙனம்? தென்திசை யமன் திசை என்பதற்குக் காரணம் என்ன? வடதிசையேன் யமன் திசையாயிருக்கலாகாது? அன்றியும், உயிர் ஒரு கூட்டை விடுமுன் மற்றொரு கூடு எய்துமென்பர் ஞானிகள். ஒன்றைப் பற்றியே ஒன்றை விடுவது மன்னுயிர் வழக்கென்றால் முன்னோர்களின் அழியா வுயிர் தனித்து ஓருலகில் தங்குகின்றது என்றல் முரண்பாடன்றோ? இவ்வையங்களை விளக்குமாறு அருள்புரிக'' என்று வணக்கமாய் வேண்டினன். 'நல்லது, இயன்றவாறு தெளிவுறப் பகருவேன்' என்று தப்பிலி கூறினர்.

புலம் என்பது நாடு, இடம், வழி என்ற பொருளில் வரும். தென்புலத்தார் என்பதற்குத் தமிழ் நாட்டார் என்ற பொருளமையும். தென்னாடு பாண்டி நாடு; தென்பாண்டி நாட்டானே என்று இறைவனும் அழைக்கப்படுவான். பாண்டி நாடே பழம்பதியாமென்று மணிவாசகனார் கூறியுளார். ஐம்புலம் ஐம்புலன் என்பதன் மருவு. மெய், வாய், கண், மூக்கு, செவி, என்ற ஐம்புலன்கள் வழியாயும் பாதுகாத்தல் கடமை எனினுமமையும். அல்லது ஐம்புலம் ஐந்திணை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற நிலத்தின் ஒவ்வொரு பாகுபாட்டிலும் தென்புலத்தாரை வழுவாமல் ஆதரித்தல் கடமை எனினுமொக்கும். பழம்பதியாகிய பாண்டி நாடு இரண்டுழியிலும் முறையே தலைநகராயிருந்த மதுரையும் கவாடபுரமும், (முத்தூர், புதவூர்; கவாடம்=முத்து, கபாடம்=கதவு, புதவு) கடலால் அழிந்து போகப் பல்லாயிரந் தமிழ் மக்கள் ஆர்கலிக்கு இரையாயினர். அவ்வாறு நீரில் மாண்ட

முன்னோரை நினைத்தல் பின்னோர் கடமையாம். பெருந்தொகையான மக்களைக் கடல் கொண்டமையால் அது சாவின் உருவகமாகிய யமனுடைய இருப்பிடமாகப் புலமை மிக்கோர் கொண்டனர்போலும். அன்றியும் மநுவின் புதல்வன் ஏமன் அவனுடைய நாடு ஏம நாடு. அதனைக் கடல் கொண்டபொழுது பல்லாயிர மக்கள் நீர்வாய்ப்பட்டனர். ஏமநாடு யமநாடாயிற்றெனினும் பொருந்தும். பிதிரருளரென்ற கொள்கை தமிழ் நாட்டார் கொள்கையன்று. புத் என்ற நரகத்தினின்று விடுவிப்பவன் புத்திரன் என்பதும அன்னியர் கொள்கையாம். முன்னோரை வணங்குதலும் தமிழ் நாட்டாரை முதன்மையாகப் பாதுகாத்தலும் தமிழ் மக்களின் ஒழுக்கமாம். "கூட்டைவிட் டுயிர் போவதன் முன்னமே காட்டுப்பள்ளி யுளான்கழல் சேர்மினே" என்பது திருநாவுக்கரசர் வாக்காகும். தென்னாட்டில மந்திர தந்திரிகள் மிகுந்திருந்தனர். அவர்கள் செய்த அற்புதங்களைக் கண்ட பிறநாட்டார் வியந்து வெருவி அவர்களைப் பிசாசுகளாகக் கொண்டு நமன் படைகளென்று மதித்தனர்போலும். அன்னியக் கொள்கை தமிழகத்தில் பன்னூறு ஆண்டுகட்கு முன்னரே புகுந்து தமிழ் நூல்களில் இரண்டு கொள்கைகளும் பின்னிக்கிடத்தலைக் காணலாம்.

தென் புலத்தாராகிய தமிழரைத் தமிழ் மக்கள் ஓம்புதல் இயல்பே. அன்னாரை ஓம்புதற் பொருட்டு ஒவ்வொரு தமிழனும் வருவாயுள் ஆறிலொரு பங்கைச் சேமித்து வைப்பதால் அது பெரும் பொருளாகும். அதனைக் கொண்டு தமிழ் மக்களில் வறிஞர், களைத்தவர், ஞாதியில்லாமலிறந்தவர், கூன், குருடு, நொண்டி,

சப்பாணி, துறவி முதலானவர்கட்கு உதவி செய்ய இயலும். மக்களுக்கு சமுகச் செலவு நேரிடும்போது அது உற்ற துணையாகும். நாம் பிறந்த நாட்டையும் நாட்டினரையும் வழுவாமற் காத்தல் நம் கடமையன்றோ? "இது நான் பிறந்த இடம், இது என் சொந்த ஊர், என்று தன்னுள்ளே தான் சொல்லாதவாறு மாண்ட அறிவினன் எவனுவது உயிர் வாழ்கின்றனனோ?" என்று **ஸ்காட்** என்ற புலவர் அதிசயித்து வினவுகின்றார். தான் பிறந்து வளர்ந்த நாட்டை மதிக்காமலும் மெய்ச்சாமலும் பெருமைப்படுத்தாமலும் இருப்பவனைக் காண்டலரிது. மூடரும் அறிவாளிகளும் பிறந்த நாட்டை மேன்மைப்படுத்தலில் சமமாகின்றனர். சொந்த நாட்டைக் காத்தலும், நாட்டின் வளத்தை விருத்தி செய்தலும், நாட்டாரை அன்புடன் ஏற்று அவரிடம் பரிவு கொள்ளலும் பிறர் ஏவுதலால் வரத்தக்கதல்ல. அவை தாமறியாமலே தோன்றும் எண்ணங்களாம். மிதமிஞ்சினுல் அமுதமும் நஞ்சாகும். உலாந்தர்களுடைய தேசாபிமானம் எவருக்குந் தெரிந்ததே. பிரஞ்சு நாட்டிலுள்ள **கலே** நகரத்தாரின் அபிமானமும் கலேர் அறிந்ததே. தங்கள் நகரத்தின்மீது கொண்ட அன்பினுல் மூன்றும் எட்வர்டு மன்னன் விரும்பியவாறு தம்முயிரைச் சிறிதும் பாராட்டாமல் அறுவர் உள்ளங்கிதரித்து வெறுங்காலுடன் கழுத்தில் நாணிட்டு வர இராணியார் பரிந்து கணவனை வணங்கி அன்னுருயிரைக் காத்தனரன்றோ? மிதமிஞ்சிய அபிமானமுற்ற **தெமிஸ்டாக்ளிஸ்** என்பவர் பிறன்கேடுவிளைந்து கூறிய

சூழ்ச்சியை அவர் நண்பரான **அரிஸ்தைடிஸ்** என்பவர் ஏற்காததனால் **கிரீஸ்** நாடு நீதிநாடென்று பெயர் பெற்றதன்றோ?

நம் தேயம் என்ற அன்பும் ஆர்வமும் வேண்டும்; நம் நாட்டார் என்றபொது உணர்ச்சியும் பொது நன்மையுஞ் சிறக்கவேண்டும். நம்நாடும் நம்மவரும் மேம்பாடு எய்துமாறு நமக்குவரும் ஊதியத்திலொரு பகுதியை ஒதுக்கு வைத்தல் நம் தலைமையான கடமையேயாம். ஊரெங்கும் வாழக் கேடொன்றுமில்லை என்றனள் ஔவையாரும்.

வியப்பிலி, "தந்தையே, குறளின் பொருள் ஒருவாறு விளங்கிற்று. தேசாபிமானம், தமிழக அபிமானம் தமிழ் மக்கட்கு உரித்து, அதன் பொருட்டு ஒவ்வொரு தமிழனும் தன் வருவாயிலொரு சிறு பகுதியை மிச்சம் பிடித்து வைத்தல் சிறந்ததொரு செயலாகும். முன்னோரை ஞாபகப் படுத்து முறைகளிற், சிறந்தது அன்னோர் பாதுகாத்துத் தந்த நாட்டை நாமும் நம் பின்னோருக்குப் பதனப் படுத்திப் பெருக்கி யளித்தலேயாம். தமிழகத்தின் கண்ணுள்ள ஒவ்வொரு திணையினனும் இச்சீரிய ஒழுககத்தைக் கடைப் பிடித்தலே தகுதி. இவ்வுண்மையை வெள்ளிடைமலை விளக்குப் போன்று விளக்க முறச் செய்த நன்றியை யான் என்றும் மறவேன்" என்றனன். உடனே அவன் தங்கையாகிய **மங்கிலி**, "அப்பா, ஊராபிமான மில்லாத மனிதப் பிறப்பு உண்டோ? ஒன்றும் விளையாத பாலைவனத்திலுள்ளானும் பாலைவனமே மக்கள் வாழ்க்கைக்குரிய தென்பான். பாலைவனத்தில் ஆறலைக்கும் கள்வரும் பாலைவனத்

தாரே மக்களிற் சிறந்தவர், என்பர். இது வெளிப் படைதானே" என்றனள். இக் கூற்றுக்களை மடுத்த தப்பிலியின் செவி இன்புற்றது. குறளின் முதற் கூறு முடிந்தது. ஏனைய நான்கு அறத்தையும் முறையே விளக்குவன், இறைவனருள்க", என்று சொற்றனர்.

---

கூறு III.

## தெய்வம்.

மக்களாகப் பிறந்த எவரும் எப்பொழுதாயி னும் தெய்வத்தை நினையாதிரார். தெய்வம் முப் பத்து முக்கோடி என்பது தமிழர் கொள்கையன்று. ஆதியென்றும், முழுமுதலென்றும் அவர் தாம் வணங் குங்கடவுளை அழைத்தனர். எண் குணத்தனுதலின் குணப்பெருமை பற்றி இறைவனை வழுத்துதல் வழக் கம். கடவுளின் குணங்களில் கொடிநிலை, கந்தழி, வள்ளி, அதாவது, எங்குமிருக்குந் தன்மை (ஒன்றே கொடிபோல் படர்ந்தல்), பற்றின்மை (கட்டுந் தறி யின்மை), வள்ளி(வரையாது ஈயுந்தன்மை) அருண்மை, இம்மூன்றே சிறப்பித்துக் கூறப்பட்டுள. இச் சொற் களுக்கு சூரியன் தன்மை (எங்கும் நின்று, உயிரளிக்குந் தன்மை), பற்றின்மை, சந்திரன் போன்று குளிர்ந்த கருணைகாட்டல் என்று பொருளுரைப்பாரு முளர். தெய்வம் என்னுங் கிளவி வடமொழியில் ஒளி பொருந்தி விளங்கும் சூரியன், விசும்பு, விண்மீன், வை கறை, நண்பகல் என்ற பலவற்றைக் குறிக்கும். கடவுளைத் தமிழர் ஒளிமயமாகக் கருதுவதால்

அன்னார் இறைவனுக்கு உரு ஏற்படுத்துவதில்லை. உறுப்புகளில்லாத ஒன்று என்ற பொருளில் நடுதறி, கந்தழி என்று பெயரிட்டுக் கடவுளை வணங்கினர். 'சிவம்' செம்மைப்படுத்துமாதலால், ஒன்றுஞ் செய்யாமல் 'சிவனே' யென்றிருந்தேன் என்று தமிழ் மக்கள் பலமுறை கூறுதலை எவருங் கேட்டிருக்கலாம. தமிழகத்தார் கடவுளை எவ்வாறு வணங்கினர்? எவ்விடத்தில் வணங்கினர்? என்பவை ஆராயத்தக்கன.

மங்கிலி, "அப்பா! 'ஆலயந் தொழுவது சாலவு நன்று' என்று ஔவைக்கிழவி கூறியுள்ளாள். கடவுள் தங்குமிடம கோயில். தமிழகத்தில் சிவன் கோயில்களும திருமாலின் கோயில்களும மலிந்துள. நீறிட்டும் மண்ணிட்டும், வில்வம, துழாய் சொரிந்தும் வணங்குதல் வழக்கம். அது எவருக்குந் தெரிந்ததுதானே" என்றனள். "என்னருமை மகளே, நீ சொன்னது சரி. தமிழர் கோயிலுக்குப்போய் கடவுளை வணங்குதலை நாடோறும் பார்க்கின்றோம். ஆயினும் தமிழ் மக்கள் முன்காலத்தில் எவ்வாறு செய்தனர் என்பதை எடுத்துச் சொல்ல எண்ணினேன்" என்றனர் தப்பிலி.

வியப்பிலி, "அண்ணலே! நீங்கள் கூறப்புகுந்த அளவில் முற்காலத்தில் கடவுளிடமும் வழிபாடும் தற்காலக் கோயிலினின்றும் பூசாரியின் தூபதீபங் காட்டலினின்றும் வேறுபட்டனவாகத் தோன்றுகின்றன. அவற்றையறிய ஆவலுளேன். தயை செய்க' என்றனன்.

"என் அருமை மகனே! நன்றுகடாயினை. வேறுபாடுண்டு என்பது திண்ணம். முதன் முத

வில் நீவிரறிய வேண்டியதொன்றுளது. அங்கு இங்கு எனாதபடி கடவுள் எங்குமுளர். ஆங்காங்குள்ளார் எங்குமுள்ள ஒருவரைத் தங்கள் தங்களுக்குரிய இடங்களில் ஞாபக நிமித்தமாக இலிங்கக் குறிகளால் இயற்றினர். இலிங்கம் ஆண்குறியென்றது அந்நியர் பகடியாம். தறி, கல் தூண்கள் போன்ற முழுமுதல் அடையாளத்தால் குறிக்கப்பட்டனர். மக்களுருவிற் றோன்றி அருளினும், கடவுளுக்குக் கை, தலை, கால் முதலான உறுப்புகளை யமைத்திலர். பலரும் கூடி வணங்குவதற்கான நிழலைத் தரத்தக்க மரத்தடியில் அதாவது மன்றத்தில் செம்பொருளை, திருமாலை அமைத்தனர். திருக்குற்றாலம் என்ற பெயர் திருவானது குறுகிய ஆலமரத்தடியில் வணங்கப்பட்டதென்ற வுண்மையை விளக்கும். அவ்விடத்தில் வட அருவி என்ற பெயரால் வடம், ஆலமரம், அதனருகில் வந்து விழும் அருவி என்பது விளங்கும். திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ' குறும்பலா ' என்று பெயர் வழங்கப்பட்டிருக்கின்றது. இன்னும் பலா மரத்தடியில் கோயிலிருப்பதைக் காணலாம். வேணுவனத்தில் மூங்கிலடியில் முழுமுதல் கொண்டாடப் பட்டமையால் தற்காலத்தில் திருநெல்வேலி யெனப்படும் நகருக்கு வேணுபுரமென்றிருந்தது. அது போன்றே மதுரையில் கடம்பவனநாதர் என்றும், திருவானைக்காவில் சம்பு (நாவல்) கேசுவரரென்றும், சிதம்பரத்தில் தில்லைவனநாதரென்றும், திருவெற்றியூரில் மகிழடியில் கோவீற்றிருந்தனரென்றும், வரலாறுகளுள. எம்பெருமான் அத்தி அடியிலும் கல்லாலினடியிலும் முனிவர்களுக்கு உண்மைப் பொருளுரைத்தன ரென்று

திருவாசகமும் தேவாரமும் முறையிடுகின்றன. தமிழகத்தில் பூசாரி என்ற பணியாளன் கிடையாது. கடவுளை வணங்கும் ஒவ்வொரு தமிழனும் பூசாரியேயாம். கூலி பெற்றுப் பூசை செய்தவர் பண்டைத் தமிழ் நாட்டிலிருந்திலர். கண்ணப்பர் தாமே அன்பு மிக்குற்றுப் பூசை புரிந்தனர். அவர் தம் வகுப்பிற்குத் தக்கவாறு தாம் அருமையாகப் பெற்ற இறைச்சியைக் குடுமித் தேவருக்கு அளித்தனர். பூவும் நீருங் கொண்டு போற்றி நாவினால் சிவன் பெயரை நவிற்றி வணங்குவதே சைவத் தமிழ் மக்கள் நடையாம்.

"பூக்கைக் கொண்டு அரன் பொன்னடி போற்றிலார்,
நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவிற்றிலார்,
ஆக்கைக்கே இரை தேடி அலமந்து
காக்கைக்கே இரை யாகிக் கழிவரே."
"சலம் பூ வொடு தூப மறந்தறியேன
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்."
"நறுமலர் நீருங் கொண்டு நாடொறுமேத்திவாழ்த்தி"—
"அலரு நீருங் கொண்டாட்டித் தெரிந்திலர்"—(அப்பர்)

ஒரே கடவுளுக்குப் பலபெயர்களுள. தாழ்ந்த அறிவுடையார்கள் தங்களறிவிற் கேற்பக் கடவுளை வெவ்வேறு பெயரா லழைப்பர்.

"நூறு கோடி பிரமர்க ளொங்கினர்,
ஆறு கோடி நாராயண ரங்ஙனே,
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்,
ஈறிலாத நல்லீச னொருவனே."

கடவுளொருவரென்ற கொள்கை தமிழர தென்பது இதனால் விளங்கும். பிரமா, விட்டுணு, இந்திரன் முதலான தேவதைகள் அவர்களுக்கு உடன் பாடில.

முதிர்ந்த அறிவுடைய ஞானிகள் வணங்குமுறை வேறாம். அன்னார் கோயில்களுக்கும் தளிகளுக்கும் போவதில்லை. "ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்." ஞானிகள் மனத்தையே கோயிலாகக் கொண்டவர்கள்

"உடம்பெனு மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படு முணர்நெய் யட்டியுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானதீயா லெரிகொள விருந்துநோக்கிற்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே."

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறைய நீரமைய வாட்டிப்
பூசனையீசனார்க்குப் போற்ற விக்காட்டினோமே."

"மெய்ம்மையா முழவைச்செய்து விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப் பொறையெனு நீரைப் பாய்ச்சித்
தம்மையு நோக்கிக்கண்டு தகவெனும வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பாராகிற் சிவகதி விளையுமன்றே."

என்றாறுமுள்ள ஈசனை ஞானிகள் வணங்கு முறை இம்மாதிரியின் ஈசனைக் கண்டவருளரோ வென்று வினவலாம்.

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளான மாமணிச்சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே."

"தன்னில் தன்னை யறிந்த தலைமகன்
தனனில் தன்னை யறியில் தலைப்படும்,

தனனில் தனனே யறியில ஞயிடில்
தனனில் தன்னேயுஞ் சார்தற் கரியனே.

"தத்துவந் தலைகண் டறிவா ரிலைத்
தத்துவந் தலைகண் டவர் கண்டிலர்
தத்துவந் தலைநின் றவர்க் கல்லது
தத்துவ னலன் தண்புக லூரனே."

விரிவிலா அறிவினர்கள் கோயில் வழிபாடு செய்வர்: விரிவுடை அறிவினர்கள் தம் நெஞ்சத்தையே கோயிலாகக் கொள்வர். எவ்வழியிலும் மேலான கடவுள் வழிபாடு தமிழகத்திலிருந்தது. மக்களுருவில் கடவுளையாக்கலும் மக்களுக்குரிய சடங்குகளையமைத்தலும் விழாக் கொண்டாடலும் பின்காலத்துப் பெருக்கேயாம். இப்பெருக்கம் எதற்கெனில் இஃதில்லாவிடின் "திருந்தவருக்கு உலகியற்கை தெரியாகாண்" என்பர்.

இதுகாறுங் கூறியவற்றால் தெய்வமுளதென்பதும், உண்மையான தெய்வ வழிபாடு இஃதென்பதும், தமிழ் மக்கள் தெய்வ வொருமைப பாடுடையரென்பதும் விளங்கி யிருக்கும், என்று தப்பிலி கூற,

"ஆம். என் அத்தனே, தமிழர் தெய்வ வணக்கஞ் செய்புமுறையை விரித்துரைக்கும நூலுளதோ? உளதெனின் இக்காலத்தில் எங்கே அகப்படும்? ஆரியருக்கு வேதங்களுள. முகமதியருக்குக் கோரானுளது. கிறிஸ்தவருக்குப் பைபில் உளது. அவை போன்று தமிழருக்குள்ள நூல் யாது?" என்று வினவினன் பண்பிலி.

அதற்குத் தப்பிலி, "உளது. அது நான்மறையெனப்படும்.· தமிழ் மறையைப் பற்றித் தெளிவுறக்

கூறுதல் என் கடமையே. கேட்பாயாக" என்று விடை யளித்தனர்.

---

## கூறு IV.

## தமிழ் மறை.

மறையென்பது கட்புலனுக்குத் தோன்றாப் பொருள். அகக்கண்ணாற் பார்ப்போருக்கே அது வெளியாகும். அன்னார் அறிவரெனப்படுவர். அவர் மூன்று காலமுந் தோன்ற நன்குணர்ந்தோர், புலனன் குணர்ந்த புலமையோர். அவரே நிறைமொழி மாந்தர். மறை மொழி புறத்தார்க்குப் புலனாகாமல் மறைத்துச் சொல்லுஞ் சொல்; அதற்கு மந்திர மென்ற பெயரு முளது.

"நிறைமொழிமாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"—குறள்.

"நிறைமொழிமாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப"
—தொல்காப்பியம்.

ஆணையாலென்றதனால் அடையாளத்தாலுஞ் சத்தியமாகவும், ஏவலாலும் கூறப்பட்டது மறையாகும். முத்திரை, அடையாளத்தால் கூறுபவர் ஈசன். அவருடைய ஏவலாற் கிளத்துபவர் அறிவர், அவர் கூறுவது உண்மைப் பொருள். பண்டாய நான்மறையென்பது மிகப் பழமையான காலத்திலுண்டாய நான் மறையாம. நான் மறை யென்றதனால் நான்கு முனிவர்க்கு அறம் பொருள் வீடு இன்பமாகிய நாற்பொருளினுண்மையினை விளக்கு நூலென்ப. மூவரும் முப்பத்து

மூவரும் மற்றொழிந்த தேவரும் காணாச்சிவபெரு மான்" என்றனர் மாணிவாசகனாரும்.

"நன்றாக நால்வர்க்கு நான் மறையி னுட் பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கற முறைத்தான்."
"அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்கினையும்
இருந்தவருக் கருளு மது"—(திருவாசகம்.)

"முத்தமிழு நான் மறையு மானான்காண்
ஆலின் கீழ் நால்வர்க் கறத்தான் கண்டாய்"
"அருந்தவன் காண் மந்திரங்க ளாயினான் காண்."
"மாயவனை மறையோர் தங்கண் மந்திரனை தந்திரனை."
"ஆலதன் கீழிருந்து நால்வர்க்கறம் பொருள் வீடின்பம்
தெளித்தானை."
"அன்றாலின்கீழ்த் திருந்துமறைப்பொரு ணால்வர்க் கருள்
செய்தானை." —(அப்பர் தேவாரம்.)

"சைவ வேடந் தானினைத்து ஐம்புலனும்
அழிந்தசிந்தை யந்தணாளர்க் கறம்பொரு ளின்பம்வீடு
மொழிந்தவாயான் முக்கணாதிமேயது முதுகுன்றே."
—(ஞானசம்பந்தர்.)

நாவலந்தீவினில் தமிழகத்தார் நால்வர்க்கு மறையோனாகிய எம்பெருமான் கருணைகூர்ந்து நாற்பொருளையும் கழறினராதலால் தமிழ்மறை கடவுளாற் பயக்கப்பட்ட தென்பதும், அம்மறை நான்கும் அருந்தவருக்கு அளிக்கப்பட்டனவென்பதும், அந்நான்கு மறையினைப் பயின்றவர் அறிவரெனப்பட்டாரென்பதும், அவ்வறிவரே தமிழகத்தில் தமிழ் மக்களுடன் அளவ

பெரு வூழிகளில் தமிழகத்தின் பெரும் பாகம் கடல் கொள்ளப்பட்ட நிமித்தம் மறை நீரில் மறைந்தபோதி

லும் தூரமான பலவூர்களில் உயிர் தப்பிப் பிழைத்த தமிழர் ஞாபகத்திலிருந்த மறை மந்திரங்களை யோதப் பல தலைமுறைகள் கழிந்த பின்னர் தமிழகத்திற் குடியேறிய ஏனையர் மறைகளின் சிறப்புகளை யறிந்து தமிழையும் தமிழ் மறையினுண்மைப் பொருளையுங் கேட்டுத் தெளிந்து, தமிழர் கைக்கொண்ட சைவ சமயத்தின் பெருமையை அறிந்து, மீண்டும் தமிழ் மொழியையும் தமிழ் மக்களின் அற நூல்களையும் விளக்குவான் பொருட்டுத் தமிழ் மாதர்கள் பெற்ற முனிவரர்களில் பெரியார் நால்வர் தேவார திருவாசகங்களையாக்கி யளித்தனரென்பதும், தமிழர் வரலாற்றைத் துருவி அறிந்தவர் கூறுவர்.

இவ்வரலாற்றைக் கேட்டுக்கொண்டிருந்த மங்கிலி மனமுருகி, "பரிதாபம், பரிதாபம், தமிழருக்குத் தெய்வ மொன்றே என்றீர்கள். அத்தெய்வத்தின் பெயர் சிவமென்றீர்கள், அவர் சமயம் சைவமென்றீர்கள், கடலிலாழ்ந்த மறைகளின் பொருளை மீளவும் துலங்கச்செய்த நூல்கள் தேவார திருவாசகங்களென்றீர்கள், எனக்கு ஓர் ஐயம் நிகழ்கின்றது. தேவார திருவாசகங்களில் மறை, வேதம் என்ற சொற்கள் ஒரு பொருள் குறித்த பல சொற்களாக வழக்கிலிருந்து வருகின்றன. பண்டாய நான்மறை யென்பதை பல்லூழிகளின் முன் தமிழகத்தில் வழக்கிலிருந்த நான் மறை யென்று பொருள்படுத்தினீர்கள். அத்தொடர் பல்லாயிரமாண்டுகட்கு முன்னர் எழுதப்பட்டன வென்று ஏனையர் கூறும் நான்கு வேதங்களைக் குறிக்கின்றதென்று ஏன் சொல்லலாகாது? மறை வேறு, வேதங்கள் வேறா? மறையே வேதமாயிற்றா? இவற்

றை அன்புற்றுத் தெளிவுற அத்தனே கூறுவீர்களாக''
என்றனள்.

வினவிய அறிவினை மெய்ச்சி, தப்பிலி "கண்மணி
யே, நன்று கேட்டனை. கேள்விகளுக்கு என்னாலியன்ற
வாறு விடை யளிப்பேன். மேலும் பெரியோர்களையுங்
கேட்டுத் தெரிந்து கொள்'' என்று மறுமொழி புகன்ற
னர்.

அங்ஙனமே வேதங்களின் பிறப்பு, வகை,
வளர்ச்சி, காலம், பெருமைகளை எடுத்துரைப்பேன்
என்று அவர் சேர்த்துக் கூறினர்.

வேதம் என்னுஞ்சொல் அறிவு என்ற பொருளைக்
குறிக்கும். உலகமறிவதற்கு வேண்டிய வழி வாய்க்கால்
களை வேதத்திற் காணலாம். தலையான வேதத்தில்
கடவுளொருவரென்ற கொள்கை காணப்படுவதில்லை.
மூவரும், முப்பத்து மூவரும், மற்றுந் தேவருமே
காணப்படும். கடவுளொருமைப் பாட்டினை எனையருக்கு
விளக்கிய விழுமியோர் தமிழரசரே யென்பர். இவ்
வுண்மையினை சதபாத பிராமணம xi லும், உபநிடதங்
களிலொன்றாகிய சந்தோகத்திலுங் (V, iii) காணலாம்.
காசியரையனாகிய அசாத சத்துரு, விதேய சனகன்,
பிரவாகன சைவலி என்பவர், சுவேதகேது, அருணே
யர், பாலாகி கார்க்கியர் போன்ற பார்ப்பார்களுக்குக்
கடவுள் எனப்படும் பொருள் சூரியன், சந்திரன், காற்று
முதலான தோற்றப் பொருள்களல்ல,

தஞ்சம் போதுஞ் சுடர்விடு சோதி,
நெஞ்சள் நின்று நினைப்பிக்கு நீதி,
நஞ்சு கண்டத்து ளடக்கிய நம்பன்''

என்று விளக்கிக் காட்டலும், அப்பார்ப்பனர் விழுமிய பொருளைப் பயந்த வேந்தரை வணங்கி வேறு கைம்மாறாற்ற வியலாதவராய்ப் பேரின்பத்தில் திளைத்தனர் என்பதை அப்பிரமண உபநிடதங்களிற் பார்க்கலாம்.

வேதங்கள் பல. ஒவ்வொரு முனிவரும் தாமியற்றிய துதிகளே வேதங்களாயின. கண்வர் முதலான பற்பல முனிவர்களியற்றிய துதிகள் மூன்று பகுதிகளாக இருந்தன. அவை திரயி என்ற பெயர் பெற்று விளங்கின. இருக்கு முதற் பகுதி, இது முற்றிலும் இசைக்கவியாலமைந்தது. இதற்குத் **தோத்திரப்பாத் தொகை** எனப் பெயரிடலாம். சாமவேதம், இது இருக்கிலுள்ள செய்யுள்களை சோமயாகஞ் செய்யுங்கால் பாடுதல் பற்றி **பாடற்றொகை** எனலாம். யசுர் வேதமென்பதில் இருக்கின் பாக்களும் உரைகளும் காணப்படும். இது இரண்டுவகைப்படும். வேள்விகளிற் பாடப்படுவனவும் இடைமிடைந்த உரைகளுமே. இம்மூன்று தொகைகளும் **திரயி வித்தியா** வெனப்படும். பின்னர் வியாசரால் தொகுக்கப்பட்ட அதர்வணவேதம் பாவினத்தில் இருக்கை யொத்தும், மந்திர தந்திரங்களைக் கூறுதலால் இருக்கினை ஒவ்வாமலும் இருக்கும். மூன்றை நான்காகப் பகுத்தவர் வியாசராதலின் **வேதவியாசர்** என்ற சிறப்புப் பெயர் அவருக்கு வாய்த்தது.

நாலு வேதங்களும் மனிதராலாக்கப் பெற்றன. அவை இந்து நதிக்கரையிலும், கங்கையாற்றின் கடுவெளிப் பரப்பிலும், தமிழகம் வந்த பின்னர் தென்னாட்டிலும் பற்பல காலங்களில் இயற்றப்பெற்றன.

அவை கடவுளாளித்தனவல்ல. அறம் பொருளின்பம் வீடு என்ற பொருள்களைப்பற்றிய பாகுபாடுகளாக ஏற்படவுமில்லை. அமரகோசத்தில் வேதம் மூன்றென்றே கூறப்பட்டுளது. அமரகோசர் காலம் ஏறக்குறைய கி. பி. 500 என்பர். அங்ஙனமாயின் வியாசர் அவர் காலத்திற்குப் பிற்காலத்தி லிருந்தவர் என்பது வெளிப்படை. அதாவது அவர், ஆயிரத்திரு நூறண்டுகளின் முன்னிருந்திருக்கலாம். தமிழ் மறை நால்வர்க்கு நாற்பொருள் கூறியதனால் நான்மறையென்று வழங்கியதை யொத்துத் திரயிவித்யாவும் நான்கு வேதங்களாக்கப்பட்டன போலும்.

தலையான இருக்குவில் தமிழ்மொழியும், தமிழ்க் கிளவிகளுமுள என்பதனால் வேதங்களின் பிறப்பு மறையின் பின்னதென்று கூற இடமுளது. தமிழ் மறைகளின் பெயர்கள் வேறு வேறாகக் காணப்படும். சாமம் என்ற பகுதி வேதத்திற்கும் மறைக்கும் பொதுவாகும்; தேவாரத்தில் இருக்கும் சாமமும் வருவதைக் காணலாம்.

“ எண்ணுடையிருக்குமாகி இருக்கினுட் பொருளுமாகி ”

“ நெருக்கி யம்முடி நின்றிசை வானவர்
இருக்கொடும் பணிந் தேத்த விருந்தனன்.”

“ சாமத்தி னிசை வீணை தடவிக் கொண்டார்.”

“ அக்நிம் ஈளே புரோகிதம்.”

ல, ள வேற்றுமையில்லை யென்று பாணினி விதி செய்தன ரென்பர். இருக்கு வேதத்தின் முதலடியிலேயே தமிழ்மொழி சிறக்க வருவது கவனிக்கத்தக்கது. அன்றியும், தமிழ்ச்சொற்கள் பல வேதங்களிற் காணப்படுகின்றன. ஆணி, குடி, குளம், கோட்டம், சவம்,

பட்டினம், வளையம், உரல், உலக்கை, கூனி—இவை அவற்றிற் சிலவாம். பெரிய திருமொழி, வெருவாதாள் என்னும் பதிகத்தில் திருமால் இன்னணங் கூறப்படு கின்றனர்.

> " சந்தோகன் பௌழியன் ஐந்தழலோம்பு தைத்திரியன்
> சாமவேதி."

பெரியாழ்வார் திருமொழி, வாக்குத்துய்மைப்பத்தில்,

> " இருக்கு எசு சாமவேத நாண்மலர் கொண்டுன்பாதம்
> நண்ணுநாள்."

திருநாவுக்கரசர் மூன்றாந் திருமுறை, திருவீழிமிழலைத் தாண்டகத்தில், இரண்டுவேதமும் கூறப்பட்டுளது.

> " தாயானைச்சசுகர மாற்கீந்தான் றன்னைச்
> சங்கரனைச் சந்தோக சாம மோதும்
> வாயானை மந்திரிப்பா ரகமனத்து ளானை."

தென்னிலங்கைக் கோமான் சுசனுக்கிடர் செய் தமுந்த அவனருள் பெறுமாறு தன் கையிலுள்ள நரம் பினை வெட்டியமைத்துச் சாமவேதம் பாடினனென்ற மையால் சாமம் பண்டாய மறையிலொன்றென் றெண்ண இடமுளது. இவ்வெண்ணத்தை வற்புறுத் தும் புலவர் 'உச்சி' மேற்கொள்ளும் நச்சினார்க்கினிய ரால் வரையப்பட்ட தொடர்மொழி இதுவாகும்.

" நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடை மையான் நான்மறை யென்றார். அவை தைத்திரியமும் பௌடிகமுந் தலவகாரமுஞ் சாம வேதமுமாம். இனி இருக்கும் யசுவுஞ் சாமமும் அதர்வணமு மென்பாரு முளர். அது பொருந்தாது: இவர் (தொல்காப்பியர்) இந்நூல் (தொல்காப்பியம்) செய்த பின்னர் வேத

வியாசர் பின்னுடை பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தாராதலின்." (பக்கம் 10, தொல்காப்பியம், சிறப்புப்பாயிரம் உரை).

"இவ்வாசிரியர் (தொல்காப்பியர்) ஆதியூழியின் அந்தத்தே இந்நூல் (தொல்காப்பியம்) செய்தலின் முதனூலாசிரியர் கூறியவாறே களவு நிகழ்ந்த பின்னாக் கற்பு நிகழுமாறு கூறித் தாம் நூல் செய்கின்ற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி இருடிகள் கரணம் யாத்த வாறுங் கூறினார்" (தொல் - பொருளதிகாரம், 145-உரை.)

" வேத நூல் அந்தணர்க்குப் பின்முறை வதுவை மூன்றும், அரசர்க்கிரண்டும், வணிகர்க்கொன்றும் நிகழ்த்தல் வேண்டுமெனக் கூறிற்று."

இம்மேற்கோள்களால் அறியக்கூடிய வுண்மைகள் சில. தைத்திரியம், தலவகாரம், பௌடியம் பிற்காலத்தில் உபநிடதங்களாகக் கொள்ளப்பட்டனவென்பது ஒன்று. வேதவியாசர் தொல்காப்பியருக்குப் பின்னிருந்தவர். இது இரண்டு. இருக்கு, யசுர், அதர்வணம் பிற்காலத்தவர் கொடுத்த பெயர்களென்பது மூன்று. ஆதியூழி கழிந்த பின்னரே திரயி வித்யா நான்கு வேதமாயிற்றென்பதும், மறைகள் மறைந்தபின் வேத விதிகளைத் தமிழ் மக்களுந்தழுவிய காரணத்தால நச்சினார்க்கினியர் அவ்விதிகளைத் தழுவியே உரைகூறியுளாரென்பதும் நான்கு. தைத்திரியம், தலவகாரம், பௌடியம் கூறும் விழுப்பொருளுண்மைகள் வேதக் கொள்கைகளுக்கு முரண்பட்ட நிமித்தம் அவை உபநிடதங்களாக மாற்றப்பட்டனவென்பதை யூகித

தல் ஐந்து. இவை திரிமூர்த்திகளைக் கூறாமல் ஒரு மூர்த்தியாகிய ஆதியையே விளக்கினபோலும்.

"மூவர் தேவாரத்திலும் மறை, வேதம், என்ற கிளவிகள் வேற்றுமையின்றி வழங்கப்பட்டிருப்பதற்கு நியாயமென்னை?" என்றனன் பண்பிலி.

"மக்களே! பண்பிலியின் வினாவிற்கு விடையளிப்பேன். கருத்துடன் கேளுங்கள்" என்று தப்பிலி சொல்லலுற்றார்.

ஆதி யூழியில் தமிழகத்தில் தமிழ் வழங்கிற்று. தமிழிலெழுதிய மறை தமிழ் மறை. தமிழ் மறை சைவத்தை விளக்கிற்று. இம்மறை கடல்வாய்ப்பட்ட பொழுது கடற்கோளினின்று மிஞ்சின தமிழ் மககள் மறை வழிப்பட்டு நடந்தனர். தமிழரசர் வலிகுன்ற வே தமிழ் நாகரிகம் நாளடைவிற் குறைந்தது. தமிழ் மொழியின் முதனிலைமைக்குப் பிற்காலத்தவர் பிராகிருத மென்ற பெயரைக் கொடுத்தனர். அம்முதல் நிலைமையில் தமிழெழுத்துக்களினுருவம் வேறான வட்டெழுத்துக்களில் நூல்கள் வரையப்பட்டதனால் அவ்வெழுத்துக்கள் கிரந்தவெழுத்துகளென வழங்கலாயிற்று. அவ்வெழுத்துகளா லமைந்த நூல்கள் மெய்ப்பொருணூல்களே. பிற்காலத்தில் எழுத்துகளின் வடிவமாறி செந்தமிழ் என்ற செம்மையான தமிழ்ச் சொற்களைச் சங்கத்தார் தாமியற்றிய நூல்களில் வழங்கினர். சங்க காலத்திலும் பின்னரும் புத்த சமணக்கொள்கைகள் தமிழ்நாடெங்கும் பரவினபடியால் தனிச் சைவந்தழுவிய அரசர்கள் அவற்றைத் தழுவத் தலைப்பட்டனர். ஆதலால், சைவம் உற்றோ

ரையும் பெற்றோரையுங் காப்பாளரையுமிழந்து வலி குன்றியது. புத்த சமணக்கொள்கைகள் நாளடைவில் இழிவுற வேதக் கொள்கைகள் தலை தூக்கின தமிழ் மக்கள் அக்கொள்கைகளிற் சிலவற்றைக் கைக்கொண்டனர். தமிழரின் சைவக் கொள்கைகளிற் சிலவற்றை வேதியர் ஏற்றனர். இருவகையாரும் இணங்கித் தழுவிய சமயம் வைதிக சைவ சமயமாயிற்று. மூவர் தமிழிலும் இக்கலவை யமைந்திருப்பதால் வேதத்திற்கு மறை யென்ற பெயர் ஒத்துக்கொள்ளப்பட்டது. அதன் முன்னர் வேதம் வேறு, மறை வேறு என்பதைப் பின் வரும் அடிகளால் அறியலாகும்.

"விண்ணுளார் மறைகள் வேதம் விரித்தோதுவார்"—
(ஞானசம்பந்தர் II திருவேகம்பம்.)

"பலவேத மங்கமாறு மறை நான்க வையுமானார்"—
(ஷை I திருச்சண்பைநகர்.)

"மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி"—
(திருநாவுக்கரசர் III ஸ்ரீகைலாயம்.)

"அங்கமா யாதியாய் வேதமாகி யருமறையோ டைம்பூதந் தானே யாகி"(ஷை III நின்ற திருத்தாண்டகம்.)

"அருமறையோ டாறங்க மாய்ந்து கொண்டு பாடினார் நால் வேதம்."

நான்மறைகள் 'பண்டாய நான்மறை' யென்றும், 'தெய்வ நான் மறைகள்' (திருமுறை V), 'பண்ணினான் மறை', (திருமுறை V 56, VI 46), என்றும், வேதங்கள் 'வெவ்வேறு வேதங்கள்' (திருமுறை IV திருவேகம்பம்) 'ஒலி சிறந்த வேதியர் வேதமும்' (ஷை IV திருவையாறு) என்றும் வெவ்வேறு அடைமொழிகளால் அறியக்கிடக்கின்றன. வியப்பிலி "அது வுண்மை. இவ்வுண்மையை யானுணர்ந்தேன். தமிழ்த்

தாயார் பெற்ற திருவரால் தேவாரமும் திருவாசகமும் ஆக்கப்பெற்றன என்பது விளங்கவில்லை. திருநாவுக்கரசர் வேளாளராதலால் அவருடைய தாய் தமிழத்தாயென்று கூறலாம். இவர் தாய்மொழியின் மீது அன்பு மார்வமு முறுதல் பொருந்தும். ஞானசம்பந்தரும் சுந்தரரும் மாணிக்கவாசகரும் பார்ப்பாரல்லரோ? அவருக்குத் தமிழ்மொழி சொந்தமானது எங்ஙனம்? இம்மூவரும் ஆரியம், வடமொழியெனும் தம் மொழியிலெழுதாமல் தமிழில் பதிகங்களை வரைவானேன்? ஞானசம்பந்தர் தம்மைத் 'தமிழ் ஞானசம்பந்த'னென்றும், 'முத்தமிழ்விரக'னென்றும் பெருமை பாராட்டிய தென்னை? இம்மாற்றங்களைத் தெளியக் கூறுமாறு வணங்குகின்றேன்' எனலும், "கூறுகின்றேன், கேள், என் அருமருந்தன்ன புதல்வனே" என்று தப்பிலி கட்டளையிட்டனர்.

பரதகண்ட மெனப்படும் பரந்தநாடு நாவலந்தீவகமாக இருந்தது. அதற்கு வடவெல்லை விந்தமலை. கடற்கோளால் தமிழகங்குறையக் கடலாயிருந்த விந்தயலையின் வட பாகம் நீர்வற்றி நாடாயிற்று. அப்பொழுது இமயம் தோன்றிற்று. இமயந்தோன்றிப் பன்னூறாண்டுகள் கழிந்த பின்னர் இந்து நதியும் கங்கை முதலான நதிகளும் இமயத்தைப் பிறப்பிடமாகக் கொண்டன. இந்நதிகள் தோன்றிய பின்னரே பரத கண்டத்தில் ஆரியர் புகுந்து பல கோட்டைகளையும் அரண்களையும் அழித்தனரென்ப. தரையாயின வட பாதியில் ஆரியர் கூட்டம் பெருகப் பெருக அவர்கள் தெற்கு நோக்கிப் புறப்பட்டனர். அப்பொழுது அகத்தியர் குடியேறிய ஆரியர்க்குத் தலைவராக இரு

ந்து விந்தத்தைக் கடந்து தென்னாடு புகுந்தன ரென்பதை அகத்தியர் விந்தத்தைச் செண்டாலடித் தடக்கினரென்று புராணங் கூறும். மேலும், அகத்தியர் புறப்படுமுன தமிழ் நாடு எவ்வழியிலுஞ் சிறந்திருந்தமையால் அவர் எம்பெருமானிடம் தமிழ் கற்று வந்தன ரென்று மதுரைப் புராணங் கூறும்.

"விடை கொடு போவா னென்னை வேண்டினனேகுந் தேய
தொடைபெறு தமிழ்நா டென்று சொல்லுப, அந்த நாட்டின
இடை பெறு மனித ரெல்லாம், இனதமிழ் ஆய்ந்த கேள்வி
உடையவ ரென்ப, கேட்டாக குததர முரைத்தல் வேண்டும்"

கம்பர் அகத்தியரைக் கூறுமிடத்து இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"நிழற்பொலிவு கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்."
"என்றுமுள தென்றமி ழியம்பி யிசை கொண்டான்."

வட நாட்டு அகத்தியனொருவர் தவிர அவரினத்தாராகிய ஏனையர் தாம் தென்னாடு புக்கபோது தம்முடன் தம் மனைவியரைக் கொண்டு வந்ததாகத் தெரியவில்லை. அல்லது மணஞ்செய்யாத பலரே வந்திருத்தல் வேண்டும். வந்துறைந்த விடங்களில் தமிழப் பெண்களை வதுவை செய்திருத்தல் கூடும். இந்நாட்டிற்கு வருகின்ற ஆங்கிலேயரிலநேகர் விடலைகளாய் வருகின்றனர். முப்பதாண்டு வரை ஊழியஞ் செய்து பொருளீட்டுகின்றவர் மணமே செய்யாதிருக்

கின்றனர். செய்வராயின் முதுவயதில் மனைகாவற் பெண்டிராக முதுகிழவிகளை மணக்கின்றனர். இந்நாட்டில் ஊழியஞ்செய்யுங் காளைப் பருவத்தில் காமத்தை யறவே ஒழித்துத் துறவிகளா யிருக்கின்றனரென் றெண்ணவோ இடமில்லை. அரசாட்சியார் உத்தரவின்றி இந்நாட்டில் அன்னார் குடியேறலாமென்றிருந்தால் ஆங்கிலேயர் இந்நாட்டிலுள்ள பெண்மக்களை வதுவை செய்து மக்களைப்பெற்று ஈண்டே வாழ்வர் என்பது திண்ணம். அவ்விதமான கட்டுப்பாடில்லாத பண்டைக் காலத்தில் வட நாட்டார் தென்னாட்டில் வந்துறைந்தமையால் ஆங்குள்ள பெண் மக்களை வதுவை செய்து தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து பல மக்களைப் பிறப்பித்திருத்தல் கூடுமென நினைக்க வியலும். அவ்வழக்கரில்லையெனில் தொல்காப்பியமும் வேத நூலும அதற்கு விதிகள் ஏற்படுத்தியிருக்க முடியா.

"அவனறிவு ஆற்ற வறிய மாகலின்
எற்றற்கண்ணும், நிறுத்தற்கண்ணும்,
உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில்
பெருமையிற் றிரியா அன்பின கண்ணும்"—(தொல். பொருள், 147).

இதற்கு நச்சினார்க்கினியர் பின்வருமாறு உரை கூறியுளார்.

"வேதத்தையுந் தருமநூலையுந் தலைவன் அறிந்த அறிவைத் தலைவியும் அறியுமாதலின் அந்தணர் முதலிய மூவருந் தத்தமக்குரிய வேள்வி செய்யுங்காற் றம் மனைவியர் பலருள்ளும் தமக்கு ஒத்தாளை வேள்விக் கண் உரிமைவகையான் ஏனை மகளிரின் உயர்த்தல்

செய்யுமிடத்தும், தத்தங் குலத்திற் கேற்ப நிறுத் தலைச் செய்யுமிடத்தும், அவர் குலத்திற்கேற்ற உரி மைகளைக் கொடுத்து தலைவரிடத்து தத்தங் குலத் திற் கேற்ற பெருமையினின்றும் நீங்காத அன்பு செய்து ஒழுகுதற்கண்ணும்........என்றது, அந்தணர் க்கு நால்வரும் அரசர்க்கு மூவரும் வணிகர்க்கு இரு வரும் தலைவியராகிய வழித் தங்குலத்திற் கொண்ட வரே வேள்விக்கு உரியர், ஏனையோர் வேள்விக்கு உரிய ரன்றென்பதூஉம், அவர்க்குத் தங்குலங்கட்கு ஏற்ற வகையின் உரிமை கொடுப்பரென்பதூஉம் கூறிய வாறு.''

'' மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமு முண்டே''

என்ற சூத்திர வுரையில் உரையாளர் எழுதியிருப் பது கவனிக்கத்தக்கது. '' முதலூழியில் அந்தணர் அரசர் வணிகரென்றும் மூவர்க்கும் உரியவாகக் கூறிய கரணம் (வேள்விச் சடங்கு) அவர்க்கும் மகட் கோடைக்குரிய வேளாண் மாந்தர்க்குந் தந்திர மந்திர வகையான் உரித்தாகிய காலமுமுள. எனவே முற் காலத்து நான்கு வருணத்தார்க்கும் கரணம் ஒன்றாய் நிகழ்ந்தது என்பதாம். அது இரண்டாம் ஊழி தொடங்கி வேளாளர்க்குத் தவிர்ந்தது என்பதூஉந் தலைச் சங்கத்தாரும் முதனூலாசிரியர் கூறியமுறையே கரணம் ஒன்றாகச் செய்யுள் செய்தார் என்பதூவுங் கூறியவாறாயிற்று.''

'' பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரண மென்ப''

இச்சூத்திர வுரையில் உரையாளர் எழுதுகின்றார்:" "இது வேதத்திற் சரணம் ஒழிய ஆரிட (இருடிவாக்கு) மாகிய காரணம் பிறந்தவாறும் அதற்குக் காரணமுங் கூறுகின்றது. ஈண்டு 'என்ப' என்றது முதநூலாசிரியரையன்று, (இருடிகளாகிய) வடநூலோரைக் கருதியது."

இவ்வுரைகளால் பார்ப்பார் தமிழப் பெண்களை மணந்தனரென்பது வெளிப்படை. வேளாளப் பெண்களுக்குத் தெய்வஞ் சிவமே. தாய்மொழி தமிழே. அன்னாருக்குப் பிறந்த மக்கள் சைவக் கொள்கைகளைப் பெருமைப்படுத்துவ ரென்பதில் ஐயமுளதோ? தாய்மொழியாகிய தமிழே அன்னார்க்குரிய மொழியாதலு மியல்பே. தந்தையர் கொள்கைகளைக் கைக் கொள்ளலும் இயற்கையே. வேதக்கலப்புடைய சைவம் வைதிக சைவமாயிற்று. பண்டைச் சைவமகளிருக்குப் பிறந்தவர் ஆதிசைவரென அழைக்கப்பட்டனர் போலும். சைவசமயாசாரியர் நால்வரில் மூவரும் தந்தையின் தொழில்பற்றி வேறு பெயர் கொண்டனரேனும் சமயம் பற்றி ஆதிசைவரெனப்படுவர். விப்பிரிவே, உன் வினாவிற்கு விடை மேற்காட்டிய வற்றால் விளக்கமுற்றிருக்குமென்று நம்புகிறேன்" என்று தப்பிலி சொன்னதும், அவன் "தந்தையரே, என் மனத்தின்கண்ணிருந்த அல் நீங்க அருளுதயமாயிற்று" என்றனன். தற்காலத்தில் நீங்கள் கைபடக்கூடிய தமிழ் மறை திருக்குறளே யாம். அதனை நீங்கள் நாடோறும் படித்துப் பொருளாய்ந்து அதன் வழி நிற்பீர்களாக.

மங்கிலி, "அய்யா! முனிவர்கள், இருடிகள் உலகப் பற்றினை முனிந்தவர் அல்லரோ? அவருக்கு வருண

முண்டோ? இருடிகளனைவரும் பார்ப்பாரென்று கூறுதல் தகுமோ? விளக்கமுறக்கூறுங்கள்" என்றனள். தப்பிலி "அம்மையே, தமிழகத்தில் வருணம் கிடையாது. பிறப்பினால் மேல் கீழில்லை. தொழிலாலும் கல்வியாலும், பொருளாலும் நிலைமை உயர்வு தாழ்வுற்றது, "பிறப்பொக்கு மெல்லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையால்" என்று தமிழ் மறையாகிய குறள் கூறுகின்றது. ஆரியரே வருணத்தை இந்நாட்டில் நாட்டினரென்று கபிலரகவல் தெரிவிக்கின்றது.

> "நால்வகைச் சாதியிந் நாட்டினீர் நாட்டினீர்,
> மேல்வகை கீழ்வகை விளங்குவ தொழுக்கால்."

அன்றியும், கீதையில் "சாதுர்வர்ணம் மயாஸ்ருஷ்டம் குணகர்ம விபாகஸ" என்பதனால் குணம், கருமம் இவ்விரண்டாலும் வருண மேற்படுத்தப்பட்டதென விளங்குகின்றது. அதே பொருளைப் பின் வருமடிகளுமுறுதிப்படுத்தும்.

> "ஜன்மனா ஜாயதே சூத்ர,
> கர்மணா ஜாயதே த்விஜ,
> வேத பாடாத் பவேத் விப்ர,
> பிரம்ம, ஞானீத பிராம்மண"

பிறப்பினால் அனைவருஞ் சூத்திரராம். கருமத்தினால் இருபிறப்பாளராகின்றனர்.

ஒரு குடும்பத்திலுள்ள பிள்ளைகளில் சிலர் தூயராகவும் சிலர் மாசுபடிந்தவராகவும் இருப்பதில் தூயரைக் காணில் விருப்பமும், மாசுடையாரைக் காணில் வெறுப்பும் அடைகின்றோமல்லவா? ஒரு வகுப்பைச் சேர்ந்த இருவரில் ஒருவன் குளித்து முழுகிவாக்

குளியாதவன் அவனை அணுகினால் என்னைத் தொடாதே யென்று கூறுவதை நீ கேட்டிருப்பாய். ஆகலால் பிறப்பினால் மேல் கிடையாது. கல்வி, செல்வம், ஞானம் இவற்றாலும் தூய்மையாலும் ஏற்படும் மேன்மையுந் தாழ்மையும் என்பதை அறிவாயாக. உலகப்பற்றினை யொழித்த துறவிகளுக்கு மேல் கீழ் ஏது? வருணம் ஏது? கிடைக்கவே கிடையாது. தமிழ் மக்களில் இல்லறம் நடாத்திய பின் முதுமையிற் குடும்பபாரத்தை மக்களிடம் ஒப்புவித்து விட்டு முனிவர்களாக வடக்கிருந்தனரென்று நூல்கள் கூறும். ஐரோப்பியர் துறவிகளனைவரும் பிராமணரென்று தவறான கொள்கையை முதலிற் பரப்பினர். அது இன்றும் சாவாது வழக்கிலிருக்கின்றது.

இந்த விவரத்தைப் பின் வரும் ஆசிரியப்பாக்களிற் காண்க.

"கலைக் கோட்டு முனி கலைமானின்றும்,
கௌசிகன் தருப்பைப் புல்லினின்றும்,
சாம்புகன் நரி தனினின்றும்,
டகப் வான்மீகன் புற்றினின்றும்,
வியாதன் செம்படத்தியின் பானின்றும்,
கௌதமன் முயலின் முதுகினின்றும்,
வசிட்டன் ஊர்வசி வயிற்றினின்றும்,
அகத்தியன் கலைய மதனினின்றும்,
பிறந்தனரென்று பேசப்படலின்,
அவர்கட்குக் குலத்தானே யறியும்,
முற்காலத்தறி வுணர்த்திய முனிவர்,
பலருளராதலிற் பிராமணன் குலமல."

—(வயிராவூசி பருகணி.)

" பிரமற்குக்-கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும்,
வசிட்டருக்குச்-சண்டாளி வயிற்றிற் பிறந்த சத்தியரும்,
சத்தியர்க்குப்-புலைச்சிதோள் சேர்ந்து பிறந்த பராசரரும்,
பராசரருக்கு-மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாசரும்,
(ஆகிய விந்நால்வரும்.)
வேதங்க ளோதி மேன்மைப் பட்டு
மாதவ ராகி மயங்கின ரனறே"—(கபிலரகவல்.

" நாயின வயிற்றிற் பிறந்த சௌனகரும்,
கழுதையின பால்வரு காற் கேய ரும்,
யானையின வயிற்றிற் பிறந்த மதங்கரும்,
மண்டவளையில் வரு மாண்டேக்கி யாரும்,
வண்ணாத்தி வயிற்றில் வந்த நாரதரும்.
சூத குலத்திற் றோன்றிய சூதரும்,
மைரவின் மகள்மகன் வண்சா பாலரும்
ஒதியந்தணருள் உயர்ந்தவராஞர்."
—(உரைச்சூத்திரம்.)

" ஆன்மகன் அசலன், மான்மகன் சிருங்கி,
புலிமகன் விரிஞ்சி, புரையோர் போற்றும்
நரிமகன அல்லனே கேசகம்பளன்,
ஈங்கிவர் நுங்குலத் திருடி கணங்களென்
றோங்குயர் பெருஞ்சிறப் புறைத்தலு முண்டால்
ஆவொடு வந்த அழிகுல முண்டோ?
(மணிமேகலை, XIII, 63-8.)

" மாமறை மாக்கள் வருங்குலங் கேண்மோ
முதுமறை முதல்வன் *முன்னர்த் தோன்றிய
கடவுள் கணிகை** காதலஞ் சிறுவர்
அருமறை முதல்வ ரந்தண ரிருவரும்†
புரிநூன் மார்பீர் பொய்யுரை யாமோ?"
—(ஷை, 93-7.)

* பிரமா. ** திலோத்தமை. † வசிட்டர், அகத்தியர்.

கிறிஸ்தவர்களுக்கு வருண வேறுபாடில்லையாயினும் சாதிபற்றித் தங்களை அழைக்கின்றனரான்றோ? இவ்வுண்மையை நீ அறிவாயாக, என்று தப்பிலி உரைக்க, "அறிந்தேன், வந்தனம் தந்தனன்."

"சிறப்புஞ் சீலமு மல்லது
பிறப்பு நலந் தருமோ?"

என்பது கபிலர் வாக்கன்றோ என்றனள் மங்கிலி.

---

கூறு V.

## விருந்து.

"விருந்தினர் முகங்கண்டன்ன விழாவணி விரும்புவாரும்"
—(இராமாயணம்.)

விருந்து என்றால் புதுமை. விருந்தினர் புதியவர். 'வம்பமாக்கள்,' விருந்தினரை ஓம்புதல் குமரியினின்று கைலைவரையுள்ள பலவகை மக்களில் தமிழரின் முக்கியமான செய்கையாம். இந்நற்குண நற்செய்கைகள் நாள் வட்டத்திற் குறைந்து வருகின்றன. சிறுவூர்கட்கு யாம் போவோமானால் முதன் முதலில் தாகத்திற்குக் கொண்டு வரலாமா என்று கேட்பது வழக்கம். தண்ணீராவது, வெந்நீராவது, நீராகாரமாவது, மோராவது கருப்புக்கட்டி, சர்க்கரையுடன் தரத்திற்கு மினத்திற்குந் தக்கவாறு கொடுப்பார்கள். புறநாகரிக மிகுந்துவரும் இக்காலத்தில் நிரப்பிடும்பையும் அதிகரிக்கின்றது. பெயக்கண்டு நஞ்சுண்டமையும் அகநாகரிகம் குறைவுறுகின்றது. கிடைக்கும் பொருளை அணி ஆடைகளிற் செலவு செய்து வருதலால் வேளாண்மை விட்டோடுகின்றது.

"வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான் மிக்கிருக்குந்
தாளாளர் ஆக்கூரிற் றான்தோன்றி மாடமே"
—(ஞானசம்பந்தர். II.)

"எந்நாளுங் காப்பாரே வேளாளர் தாம்"—(விடுகவி.)

தன் வயிறு வளர்த்தலேயே கண்ணுகவுடைய வரைப் பின் புத்திக்காரரென்றுகூறு முலகம். தேடி வந்தவரை உபசரிக்கும் நடை தமிழ் மக்களில் வேளாள ரிடமே மிகுந்து காணப்பட்டதாக விளங்குகின்றது. இல்வாழ்க்கையின் முதற்கடமை விருந்தோம்பி வேளாண்மை செய்தலாம். சாவாமருந்தாகிய அமுதங் கிடைப்பினும் விருந்தினரைப் புறக்கணித்துண்டல் பொருந்தாத நடையாம். விருந்தோம்புதலாகிய அறத் தைக் கடைப்பிடித்தவர் வறுமை எய்தார். அவரகத் தில் செய்யாள் உறையும். அவர் புலம் வித்திடாமலே விளையும். அவர் தேவரால் நன்கு மதிக்கப்படுவர். விருந்தோம்பல் அகவேள்வி யெனப்படும். இவ்வேள்வி இயற்றுதாரே தம்மை நீத்தாராக மதிப்பர். அவ ருடைமையு ளின்மை விருந்தோம்பா மடமை. "இன் மையுளின்மை விருந்தொரால்" என்பர் நாயனுர். விருந்தினரை முகனமர்ந்து ஏற்றலே பெருமை. முகந் திரிந்து நோக்கும்போது விருந்து குழையும். "விருந் தும் விரும்பிலார் முற்சாம்," "கலம்பரப்பி நன்றாட்ட. நந்தும் விருந்து."

விருந்தினராக வருபவர் பெரும்பாலும் திருவற்ற வர்கள். அவர்கள் நீத்தார், வறியர், களைத்தார், உடற் குறையுற்றார் முதலான பலராவர்.

"சிறப்பில் சிதடும்* உறுப்பில் பிண்டமும்
கூனும் குறளும் ஊமும் செவிடும்

---

குருடனும்.

மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க்
கெண்பே ரெச்சம்"—(புறம் 28) என்மனார்புலவர்.

"இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்" என்றனர் சுந்தரர். "சிந்தை யன்பொடு சென்றெதிர் வணங்கி," "யாதுமொன்று பக்கலுண்டாகி லன்ன தென்பிரானடியவ ருடைமை ஐயமில்லை நீரருள் செய்யும்." என்பார் இக்காலத்திலுளரோ?

"ஏரினமல்கு வளத்தினால் வரும் எல்லையில்லதோர் செல்வமும
நீரின்மல்கிய வேணியா ரடியார் திறத்து நிறைந்ததோர
சீரின்மல்கிய அன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும்
பாரின்மல்க விரும்பி மற்றவை பெற்றநீடு பயன்கொள் வார்."

"ஆரமெனபு புனைந்த வையர்தம் அன்பரென்பதோர் தன்மையால்
நேர்வந்தவர் யாவராயினும் நித்தமாகிய பத்திமுன்
கூர்வந் தெதிர் கொண்டுகைகள் குவித்துநின்று செவிப் புலத்
தீரமென்ம துரப்பதம்* பரிவெய்த முன்னுரை செய்த பின."

"உண்டிநாலு விதத்திலாறு சுவைத் திறத்தன வொப்பிலா
அண்டர்நாயகர் தொண்டரிச்சையி னமுது செய்ய அளித்துளார்."

இத்தகைய புண்ணியவாளர் இளையான்குடி மாறனாரெனப்படுவர்

இல்லறத்தின் முதலறம் விருந்தோம்பலாதலின் மனைத்துணையாகிய இல்லக்கிழத்தியும் காதலனுடன்

---

*மதுரமொழி.

ஒருமனப்பட்டு இணங்குந்தன்மை பொருந்தினவளா யிருந்தாலன்றி 'வான் சகடஞ் செல்லாது தெற்றிற்று நின்று' என்றனர் புலவர்.

"பெருந் தடங்கட் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமுங் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே"—(கம்பர்.)

முன்பு அறியாததோர் வறியர்வரின் சிந்தை கனிந்து நாயகனழைக்கப் புற்றிலுள்ளதோ ரரவு போன்று சீறி மனைவி விழுவாளாயின் அவன் நிலைமை யென்னும்?

"கற்புங் காமமு நற்பா லொழுக்கமு
மெல்லியற் பொறையு நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலுஞ் சுற்றமோம்பலும்
பிறவு மன்ன கிழவோள் மாண்புகள்" —(தொல்காப்பி
யம், கறபியல். சூ. 11.)

எக்குலத்தராயினும் காதலனுங் காதலியு மொத்து இல்லறஞ் செய்வரேல் அவர்குல மேம்படும், அவர்வழி சிறப்பெய்தும்.

புலனுழு துண்மார் புன்க ணஞ்சித்
தமதுபகுத் துண்ணுந் தண்ணிழல் வாழ்நர்'

இது சோழன் கிள்ளிவளவனைக் கோவூர் கிழார் சிறப்பித்துப் பாடியது. "அறிவால் உழுதுண்ணுங் கற்றோரது வறுமையை யஞ்சித் தம்முடைய பொருளைப் பகுத்துண்ணும் குளிர்ந்த நிழலையுடையவரால் வாழ்வாரது மரபினுள்ளார் இவர்" என்பது இதன் பொருள்.

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே."

(புறம். 18.)

ஆதலின் எண்பேரெச்சத்தார்க்குஞ் செய்யும் அறஞ் சிறக்கும்.

திங்கட் புத்தேள் திரிதரு முலகத்து
வல்லா ராயினும் வல்லுந ராயினும்
வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி
அருள வல்லை"—(புறம். 27.)

இவ்வாறு நலங்கிள்ளியை முதுகண்ணன் சாதத ஞர் புகழ்ந்திருப்பதை யுற்று நோக்குவீர்களாக, என்றனர் தப்பிலி.

இவ்வுரையை யுற்றுக்கேட்ட மங்கிலி, "அப்பா, எனக்கொரு ஐயம் உண்டாகின்றது. நம் இனத்தார் நம் இல்லத்திற்குவரின் அவருக்கு நாம் விருந்தளிக்கின்றோம். வறியர்வரின் பிச்சையிடுகின்றோம். மேலே கூறிய வுரையில் விருந்தினர்முன்னறியப்படாத புது மக்களென்று கூறப்பட்டுளது. இனத்தார் விருந்தினராவரோ? யாம் முன்னறியாத மக்கள் எம்மில்லத்துக்கு வரின் அவர் விருநதினரா?" என்று கேட்டனள்.

"அம்மையே, நன்கு கேட்டனை, நீ பெண்மணியாதலின் அதனைக் கேட்டறிந்து கொள்வது உன் கடமையே" யென்று மெய்ச்சிச் சுருக்கமாக, "யாம் முன்னரறியாதவருக்குக் கைம்மாறு கருதாமல் ஊணளித்தலே விருந்தோம்பலாகும். இனத்தாருக்கு வுண்டிகொடுத்தல் 'சுற்றந்தழால்' என்பதிலடங்கும்.

சுற்றத்தார் விருந்தினராகார், இதனை நீ யறிவாயாக"
என்று தப்பிலி மறுமொழி பகர்ந்து,

"பண்டையிற் பெரிதே
அமிழ்தட்டானுக் கமழ்குய் *அடிசில்
வருநர்க்குவரையா வசையில்வாழ்க்கை
மகளிர்" போன்று

நீயும் வாழ்வாயாக என்று தப்பிலி வாழ்த்தினர்.

---

## கூறு VI.

## ஒக்கல்.

"சுற்றமென்னுந் தொல்பசுக் குழாங்கள்".

ஒக்கல் சுற்றம். சுற்றம் தந்தை வழிச்சுற்றம், தாய் வழிச்சுற்றம், கலைவழிச்சுற்றம், பொருள்வழிச் சுற்றம், என பலவகைப்படும். பின்னிருவழிச் சுற்றமும் நட்பின் வழிப்பட்டதாம். முன்னிருவழிச் சுற்றமும் தமரெனப்படும். எவ்வகையரேனும் சுற்றந்தழுவுதல் மக்களின் கடமையாம். உற்றுரை யோமபல் முறை யென்று கொள்பவர் உறவினரை நீங்காதவ்வகையில் தழுவுதலைத் தவறென்பரோ? முயற்சியின் பயன் பெறாது கவலுற்றவன் கேளிரையு முறவினரையுங் காணின் அவன் வருத்தம் நீங்கும். கெடினும் தாங்கு வர் கிளைஞர். அவர் நிழல் மரம் போலவும், பழு மரம் போலவும் தளர்ந்தவருக்குத் துணையாயிருப்பர். தன்காய் பொறுக்காத கொம்பு இல்லாதது போன்று தம்மினத்தார் துயரைத் தாங்கத் தகாதவரிலர். பிறரைத் தாங்குவதில் தளர்ச்சியில்லாதவர் உறவு

---

*தாளித்த.

வேறுபடாது, குன்றுமென்பர். எவராயினும் துன்பப் படின் அவர் துன்பத்தைத் துடைப்பவரே மேன்மக்க ளெனப்படுவர். பாலுடன் சர்க்கரை சேர்த்துப் பிறர் கையினின்று பெற்று உண்ணலினும் கிளைஞர் மாட்டு உப்பிலிப் புற்கைகொளல் இனிதாம். அன்னார் அடகிடுவரேனும் அருமையதாம். இடருற்றுழி உறவி னர் சூட்டுக்கோல்போல எரியிலும் புகுவர். இன்ப மடையுங்காலத்தில் ஒன்றாயிருந்து துய்த்துத் துன்ப மடையும்பொழுது துன்பமடையாமல் விலகு முறவி னருக்கு மறுமையிலும் நலம் வராது. பெரும் பணம் படைத்த அன்பிலாத உறவினரைச் சார்ந்து அவரு டன் நல்லுணவு கொள்ளலினும் தம்மைப்போன்ற வறி யார் வீட்டில் அளிக்கப்படும் உடலோடிசைந்த நொய்க் கஞ்சி தேவருணவுபோல்வதாம். வறுமை எய்தியக்கண் ணும் பழமை பாராட்டுதல்கிளைஞரிடமே காணலாம். குசேலர் வரலாற்றைப் பார்க்க தமரெனப்படுவாரே கரவாது கரைந்துண்ணுங் காக்கையினுக்கமுடையர். கிளைஞரைத்தாங்கும் செல்வரே செல்வர். செல்வம் பெற்றதின் பயனதுவாம். "செல்வர்க்கழகு செழுங் கிளை தாங்குதல்." பக்கத்தில் சுற்றத்தாரிருப்பின் ஒரு வனுக்கு அது அரண்போலாம். தமர் தம்மைச் சுற்றி யிருக்க விரும்புகிறவன் குற்றம் பார்க்கலாகாது. கொடையாளியாயிருத்தல் வேண்டும். இன்சொலு மாற்றலுமுடையவனாயிருத்தல் இன்றியமையாதது. "குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை." தவறுசெய்யாத மனிதப்பிறவியுண்டோ? தவறு கண்டு பொறுத்தல் தகைமை. "பிழைத்தவை பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை" (திருச்சதகம், 66.)

" பழகினல் வரும் பண்டுள சுற்றமும்
விழவிடா விடில் வேண்டிய தெய்தொணு"—
(அப்பர்-திருச்சேறை, திருக்குறுந்தொகை)

ஒதுங்கியிருப்பவருக்குச் சுற்றமில்லை. பழகுவதனுல் சுற்றம் சுற்றும். விழவிடுவதனுல் வேண்டியது வந்துறும். "எக்காலுஞ் செய்யாரெனினுந் தமர் செய்யவர்." நல்ல கிளைஞர், நற்சுற்றமெனப்படுவர். அவர் அல்லலொருவர்க்கு வந்துற்றக்கால் வெளிப்படுவர். துன்னூசிபோம் வழிபோகும் இழைபோன்று தமராகியவர் என்னபடினுஞ் செய்வன செய்வர். "எடுப்பிற் கிளையுட் கழிந்தா ரெடுக்க." "கிளைஞர் மாட்டு அச் சின்மை கேட்டலினிதே." இல்லறத்தாள் செய்யும் அறத்தில் விருந்திடலுஞ் சுற்றமோம்பலும் முக்கியமாம். "பான்மொழியா ரின்கண் பெருகின் இனம் பெருகும்." பரிசிலனுங்கூட

" வடியா நாவின் வல்லாங்குப் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்ற மருந்தி
யோம்பா துண்டு கூம்பாது வீசி" (புறம். 47.)

தான் பெற்றதைக் கொண்டு அதனைப் பாது காவாது சுற்றத்தை யூட்டுவுன் என்றனர் கோவூர் கிழார். நல்குரவுற்ற பாணனுக்கும் ஒக்கலுள ரென்றனர் ஆலத்தூர் கிழார்.

" கையது கடனிறை யாழே, மெய்யது
புரவல ரின்மையிற் பசியே, அரையது
வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்
ஓம்பி யுடுத்த உயவற் பாண,
பூட்கை யில்லோன் யாக்கை போலப்

பெரும்புல் லென்ற இரும்பே ரொக்கலை
வையக முழுதுடன் வளை இப் பையென
என்னை வினவுதியாயின் மன்னர்.........
கிள்ளி வளவற் படர் குவை'' (புறம். 69)

"உண்டாயிற் பதங் கொடுத்து
இல்லாயி னுட னுண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல் எங்கோமான"—(புறம். 95.)

மக்களே, யான் இது காறுங் கூறியவற்றால் செல் வருக்கும் வறிஞருக்குஞ் சுற்றமுளது என்பது விளங் கும்.

"தந்தம் பொருளும் நமர்கண் வளமையும்
முந்துறநாடிப் புறந்தர லோம்புக''

என்ற முன்றுறை அரையனார் அருளிய முதுமொழி யைக் கைக்கொண்மின், எனத்தப்பிலிபகர, உடனே மங்கிலி "சுற்றந்தழுவுதல் அறச்செயலே. சுற்றத் தைத் தழுவுகின்ற குணத்தைக் காண்டலரிதாயிருக் கின்றது. கோடியிலொருவர் அகப்படுவரோ, தெரிய வில்லை'' என்றனள். "ஆம், அம்மே, அறஞ்செய் வார் சிலர், மறஞ்செய்வாருலகிற் பலரேயாவர். ஆயினும், அறவழிபற்றி நடத்தலே நம் குறிகோளா யிருத்தல் வேண்டும். 'நல்லாரொருவ ரிருப்பரேல் அவர்பொருட் டெல்லார்க்கும் பெய்யு மழை' யாத லின், நற் சுற்றமாகி நாம் நம் கிளைஞரை யோம்புதல் நலமாம், என்று தப்பிலி புகன்றனர்.

## கூறு VII.

## தான்.

தானென்பது இல்வாழ்வான். அவன் தனக்கு இயல்புடைய மூவராகிய தந்தை, தாய், தாரம், ஓம்புதல் சிறப்பேயாயினும் சுவரின்றிச் சித்திரமில்லையாதலால் தன்னைப்பேணுதலும் கடமையேயாம். தற்காப்பு முதல்விதி யென்பர். தன்னுடலைப் பேணி அதனை உறுதிபடச் செய்யாவிடில் அறத்தாக்கஞ்சிறவாது. அது பற்றியே சித்தர்கள் காய கற்பம், காய சித்தி செய்வர். நீடியகாலந் தவஞ் செய்வார்க்கு உடல் வன்மை பெற்றிருத்தல் அகத்தியம். இல் வாழ்வான் தன் வருவாயில் ஆறிலொரு பகுதியையே தனக்கெனக் கொள்வான். 'தென்புலத்தா'ரென்ற குறளில் பிறர்க்கென வாழ்வான் முறை கூறப்பட்டுளது. தற்கால நாகரிகப்படித் தன்னை முதலிலும், ஒக்கலை அடுத்தபடியிலும், விருந்தினரை அதற்கடுத்தும், தெய்வத்தை அதன் மேலும், தென்புலத்தாரை அதன் மேற்படியிலும் வைப்பது வழக்கம். தன்னைப் பேணுபவன் அன்பும் அறிவும் அருளும் பண்பும் பணிவும் பொறையும் தூய்மையும் சால்பும் உடையவனாய், காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல் ஈதன்மறுத்தலாகிய தீத்தொழில்களை விழையாதவனாய், ஒப்புரவாற்றுபவனாய், தகைமையால் வெற்றி பெறுபவனாய், தீதிழைப்பார்க்கும் நன்னயஞ்செய்து ஒறுப்பவனாய் விளங்கவேண்டும். தற்காப்புறவான்,

> "தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க."
>
> "யாகாவா ராயினும் நா காக்க."

என்ற கட்டளைகளை மேற்கொண்டொழுகல் வேண்டும். "திருவொக்கும் தீதிலொழுக்கம், பெரிய அறனேக்கும் ஆற்றினொழுகல்." "இனியனெனப் படுவான் யார்யார்க்கே யாயினும், முனியா வொழுக்கத்தவன்."

"கள்ளாமை வேண்டும் கடியவருதலால்,
தள்ளாமை வேண்டும் தகுதியுடையன,
நள்ளாமை வேண்டும் சிறியரோடு, யார் மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை."

"அவ்வித் தழுக்கா றுரையாமை முன்னிதே,
செவ்வியனுய்ச் செற்றச் சினங்கடிந்த வாழ்வினிதே,
கவ்வித்தாங் கொண்டு தாங் கண்டது காமுற்று
வவ்வார் விடுத லினிது."

"தன் காரியம் பாராதான் சாமி காரியம் பாரான்" என்பது பழமொழி. ஊன்றி நோக்கியுணரின், இதனுண்மை விளங்கும். தன்தொழிலைப் பார்ப்பவன் பிறருக்கு நன்மை செய்பவனே. ஏனெனில் மடியுளான் மன மாசடைந்து மிடியெய்தித் தீமை செய்யப் புகும். தன்வேலையைத் தானே செய்பவன் பிறருக்குப் பாரமாகான். அவ்வாறு பாரமாகாத அளவில் சமுகவாழ்வு மேம்பெய்தும்.

"எமக்கீவோர் பிறர்க்கீவோர்,
பிறர்க்கீவோர் தமக்கீப."

இது ஔவைகிழார் கூற்று. இதன் பொருளாவது: "வறுமையுற்ற எங்களுக்கு ஒன்றை இடுவாரன்றோ பயன் கருதாது பிறர்க்கு இடுமவர்களாவார். எம்மை யொழிந்த பிறர்க்கு இடுவாரன்றோ பயன் கருதியிடுதலால் தங்களுக்கே இடுவோர்."

இல்வாழ்வான் பண்பும் பணிவுமுடையனுயிருப் பின் நலம். தானென்ற ஆணவம், அகங்கார மிகுமேல் அறவொழுக்கம் அகலும். சகலாகம பண்டிதர் மெய் கண்டாரிடம் ஆணவங்காட்டிய ஞான்று ஏறிட்டுப் பார்த்து அவ்வாணவத்தை ஒழிக்கச் செய்ததும்,அவர் தலைமையான சந்தனச்சாரியாருக்குத் தலைமாணவரா யினரான்றோ? தாம் பிறப்பினுற் பெரியரென்றும், தாம் பிரமமென்றுந் தருக்குஞ் செருக்குமுற்ற மாபாவிகள் பிறர்க்கென வாழாதவர். பிறர்க்கென உழைக்கும் உழைப்பினுல் தமக்குரிய நலம் தானே வரும் என்ற உணர்ச்சியுடையாரே மேன்மக்களாவர். அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒவ்வொருவர் வரலாறும் இவ் விழுமிய உண்மையினையே விளக்கும். தன் பற்று அற்ற அன்னார் துறக்கமெய்தினர். துறக்கம் பெறுதல் ஒருவர்க்கு எந்நலத்தினு மிக்க நலமன்றோ? "யானென தென்னுஞ்செருக்கறுப்பான் வானோர்க்குயர்ந்த வுலகம் புகும்" என்றார் நாயனாரும்.

தன்னைப்பேணுதலாகிய அறம் கூட்டையும் ஆவி யையும் பேணுதலாகும். மருந்தினுற் கூட்டைப்பேணு வார் அறத்தினுல் ஆவியைப் பேணுதலே தகுதி. எதெனில் யானென்பது உடலன்று, என்று மழியா மன்னுயிரே யாம். "கூட்டை விட்டாவிதான் போயின பின் யாரே அநுபவிப்பார்"?. பயன் கருதாமற் பலருக் கும் அறமாற்றுபவன் இல்வாழ்பவனுதலின் அவன் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளுதல் தலை சிறந்த கடமை யே யாம்.

வியப்பிலி, " பிறவி பிணி யென்பார்க்கு உடம்பு மிகையாமே. அதனை வருத்தி வாழ்பவரே உய்வர்

என்ற கொள்கைக்குமாறாக உடலினை நோயின்றிப் பாதுகாத்து நீடூழி வாழ்தல் கடமை யென்றீர்களே. இந்த முரண்பாட்டைத் தீர்க்குமாறு வணங்குகின்றேன்'' என்றனன்.

''நன்று வினவினாய், வியப்பிலியே. மானிடப் பிறவி கிடைத்தலரிதெனின் அப்பிறவியில் செய்யத் தக்கன செய்தன்றோ மேற்பிறவி எய்தலாம். செய்யத் தக்கன செய்யாமல் மனிதப பிறவியை ஒழித்தல் எங்ஙனம்? மேலுலக மில்லெனினும் இவ்வுலகில் முன்னியதை முடித்தற்கு நோயற்ற நெடு ஆயுள் மிகையாமா? தத்துவமுணர்ந்த ஞானியும் 'பல் வலி பொறுக்கார்' என்ற முதுமொழியைக் கேட்டிலையோ? உடம்பில் சிறு நோயணுகினும் மனநதுயருற்றுத் தத் தளிக்கின்றதன்றோ? மனவொருமைப் பாடின்றி ஒன்றுஞ் செவ்வனே செய்தல் இயலாது. ஆதலால், காயவுறுதி பெறக் கற்பஞ் செய்து அருந்தி அறஞ் செய்தலே மேலானதென்ற சித்தர்களின் கொள்கையே, தமிழகத்தார் கொள்கையாதலின் அதனைக் கைப் பிடித்தல் உன்னைப் போன்ற அறிவாளிகளின் கடமையாகும். விரிக்கிற்பெருகும். நின் வயதுங்கல்வியும் வளர வளர இதன்பொருள் உனக்கு விளங்கும். உனக்கு நீடித்த நல்வாழ்வு இறைவனருள்க'' என்று தப்பிலி விடை பகர்ந்தனர்.

பண்பிலி, ''மேற்கோளாகக் கொண்ட குறளில் கூறப்பட்ட ஐவகை யறத்தையும் தெளிவுற எடுத்துரைத்தீர்கள்.

''வீழ்நாள் படாமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நா ளடைக்குங் கல்.''

என்பது உண்மையே. அறஞ் செய்வார்க்கு அரண் அரசன்றே ?

" ஆபயன்குன்று மறுதொழிலோர் நான்மறப்பர்
காவலன் காவா னெனின்."

" அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு."

ஆதலால், இறையைப் பற்றியும் இறை மாட்சியைப் பற்றியுஞ் சிறிது விளம்புமாறு வணங்குகின்றேன்" என்றனன். "அருமைச் செல்வனே, குடியின்றி அரசில்லை, அரசின்றி ஆக்கமில்லை, யாதலின் அரசாட்சியைப்பற்றி உங்களுக்குச் சிறிது புகலுவேன்," என்று தப்பிலி விடை யளித்ததும், அவனது மனமகிழ்ச்சி முகமலர்ச்சியால் விளங்கிற்று.

---

## கூறு VIII.

### அரசு.

அரசு மாநிலமன்னன், மாராயன். இராசன், நிலனுள்பவன். மன்னன் நிலைபெற்றவன். காவலன் காவல் செய்வதில் வல்லவன். வேந்தன் குற்றங்கடிபவன், கண்டிப்பவன். புரவலன், ஊர் காப்பில்வல்லவன். கோன், செங்கோலையுடையவன். இறைவன் உயர்ந்தோன், ஆராய்ந்து கடமை செய்வோன், வரிபெறுபவன், கோ, கோமான், வில்வித்தை பயின்றவன், பெருமையுடையவன். அரசு முறையே முறைமையாம். நல்ல அரசரின் இலக்கணத்தைக் கம்பர் தசரதர் முகமாகக் கூறுகின்றார்.

" தாயொக்கும் அன்பிற் றவமொக்கு நலம் பயப்பில்,
சேயொக்கு முன்னின்றொரு செல்கதியுய்க்கு நீரால்,
நோயொக்கு மென்னின் மருந்தொக்கும், நுணங்குகேள்வி
ஆயப்புகுங்காலறிவொக்கும் எவர்க்கும் அன்னான்."

ஈய்ந்தே கடந்தான இரப்போர்கடல், எண்ணின் நுண்ணூல்
ஆய்ந்தே கடந்தான அறிவென்னும் அளக்கர், வாளால்
காய்ந்தே கடந்தான் பகை வேலை, கருத்துமுற்றத்
தோய்ந்தே கடந்தான் திருவிற்றொடர் போகபௌவம்."

" வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசியர்
உள்ளமு மொருவழி யோட நின்றவன்
தள்ளரும் பெரும்புகழ்த் தயரதப் பெயர்"
வள்ளளல் வள்ளுறை அயில் மன்னர் மன்னனே.
—(கம்பராமாயணம்-அரசியற் படலம்.)

ஏனைய புலவர்களும் அரசர் குணகுணங்களைப் பற்றி கூறியவற்றிற் சில ஈண்டு வருவன.

" மழையின்றி மாநிலத்தார்க்கில்லை, மழையும்
தவமிலா ரில்வழி யில்லை, தவமும்
அரசிய லில்வழி யில்லை, அரசனும்
இல்வாழ்வா னில்வழி யில்."

கோனோக்கி வாழுங் குடியெல்லாம்."

" பிறனும்
நாடேக்கல் மன்னர் தொழில் நலம்."

" முறையொடு
வென்றி யறிப அரசர்கள்."

" யார்கண்ணும்
கண்ணோட்டம் இன்மை முறைமை."

" பற்றிய
மண் அதிர்ப்பின் மன்னவன் கோல் அதிர்க்கும்."

"தார்புனை மன்னர் தமக்குற்ற வெஞ்சமத்துக்
கார்வரை யானைக் கதங்காண்டல் முன்னினிதே
"மறமன்னர் தங்கடையுள் மாமலைபோல் யானை
மதமுழக்கங் கேட்டல் இனிது."

"பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே.
"வாள்மயங்கு மண்டமருள் மாறாத மாமன்னர்
தானை தடுத்தல் இனிது."

"ஒற்றினு ெனாற்றிப் பொருடெரிதல் முன்னினிதே,
முற்றான் றெரிந்து முறைசெய்தன் முன்னினிதே,
பற்றிலனாய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்
வெற்றல் மேல் வேந்தர்க் கினிது."

"கோவினிற் கருங்கலங் கோட்ட மில்லது."

அரசனுக்குப் படை குடிகளே. அதனாலன்றோ **குடிபடை** யென்ற பெயர் வழக்கிலுளது. அரசருக்கு வேண்டியன படை, குடி, கூழ் அமைச்சு, ஒற்று, தூது, நட்பு, அரண். இவை புறவுறுப்புகள்.

"பத்திமை சான்ற படையும், பலர்தொகினும்
எத்துணையு மஞ்சா எயிலரணும்-வைத்தமைந்த
எண்ணி னுலவா விழுநிதியும்-இம் மூன்றும்
மண்ணாளும் வேந்தர்க் குறுப்பு."—(திரிகடுகம்.)

அகவுறுப்புகள் அஞ்சாமை, அருண்மை, அறிவு, ஊக்கம் என்பன. அரசன் குணம் பண்பு, காட்சிக் கெளிமை, இன்சொற்கூறல், ஈதல், அளித்தல், நடுவு நிலைமை, மானம் என்பர். அரசன் தொழில் இயற்றல், ஈட்டல், காத்தல், காத்தவகுத்தல், அல்லவை நீக்கல், முதலியன. அரசனுடைய பொருள் உறுபொருள் (புதையலும், அனுதிச்சொத் தும் ஆறிலொரு பகுதியும்), உல்கு பொருள் (ஆயம், சுங்கம் இவற்றால் வரும்

பொருள்), ஒன்னார் தெறு பொருள் (பகைவரை அடர்த்துப் பெற்ற கப்பம்), எனலாம். அரச அடையாளங்களாவன படை, கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், தார், முடி.

> " கால்§ பார்*கோத்து ஞாலத்தியக்(கு)கும்
> காவற் சாகாடு, உகைப்போன்† மாணின்‡‡
> ஊறின்றாகி ஆறினிது படுமே ;
> உய்த்தல்*தேற்றா னாயின், வைகலும்
> பகைக் கூழ் அள்ளற் †பட்டு
> மிகப் பஃறீநோய் ‡‡தலைத்தலை ‡‡‡தருமே.
>
> —(புறம். 185.)

அரசன் முறை பிழைப்பின் அவன் உலகப்பழிப் காளாவான்.

> மாரிபொய்ப்பினும் வாரி†குன்றினும்
> இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
> காவலர் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்."
>
> —(புறம், 35)

> கோடாதசெங்கோல் குளிர்வெண்குடைக் கோதை
> வெள் வெல்வேல்
> ஓடாத தானை உருமுக் குரலோடை யானை
> வாடாத வென்றிமிகு சச்சந்த என்பானென்மன்னன்"
>
> —(சீவக சிந்தாமணி பதிகம்.)

திருமக ளருளப்பெற்றுத் திருநலத் துறையுமாந்தர் ஒருவனுக் கொருத்திபோல உளமகிழ்ந் தொளியின்வைகிப்

---

§உருளை 'பூமி, உலகு. †செலுத்துவோன். ‡‡மாட்சி மைப்படின்.

செலுத்துதல். குழைசேறு. ‡‡ பலவகைப்பட்ட தீயதுன்பம். ‡‡‡ மேன்மேலும்

† விளைவு.

பருவரு பகையுநோயும் பசியுங்கெட் டொழிய விப்பாற்
பெருவிறல் வேந்தர் வேந்தன்"—(ஷை பூமகளிலம்பகம்).

அரசருக்கு ஐம்பெருங் குழுவும் எண்பேராயமும் உண்டென்பர். குழு ஐந்தாவன அமைச்சர், புரோகிதர், சேனுபதியர், தூதுவர், சாரணர் என்பர் திவாகரர். சிலப்பதிகார அரும்பதவுரையாசிரியர் மாசனம், பார்ப்பார், மருத்தர், நிமித்தர், அமைச்சர் இவ்வைவரே வேந்தர்க்கு அவைக்களத்தா ரென்பர். எண்பேராயம் என்பது திவாகரத்தின்படி கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானை வீரர், இவுளி மறவர் ஆவர். உரையாளர் கூறும் ஆயத்தோர் எண்மராவார், சாந்து, பூ, கச்சி (இடைகட்டு), ஆடை, (சீலை), பாக்கு, இலை (வெற்றிலை), கஞ்சகம் (கண்ணிலிடும் மருந்து), நெய் இவை விற்பவர்.

"அரசருடைய முதற்கடமை காத்தல். 'காவலன் காவானெனின் ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல் மறப்பர்' என்ற குறளை என் செல்வன் பண்பிலி தந்தமையால், அதன்பொருளை விளக்குவன். மக்களே, கவனிப்பீர்களாக" என்று தப்பிலி வேண்டினர்.

---

## கூறு IX.

## ஆபயன், அறுதொழிலோர்.

தமிழ் மறையாகிய திருக்குறளுக்குத் தமிழ்மகளாலாக்கப் பெற்ற வுரை கிடைத்திலது. ஆயினும், மணக்குடவர் 'ஆபயன்' என்பதற்கு பசுக்கள் பால் என்றும், 'அறு தொழிலோர்' என்பதற்கு அந்தணர்

என்றும் உரை வரைந்துளா ஆபயன் ஆவி னின்று ஆகும் (கொள்ளப்படும்) பலன். இது பாலென் பர். அறு தொழிலாவன மறையோதல், ஓதுவித்தல், வேள்வி செய்தல், செய்வித்தல், (வேட்டல், வேட்பித் தல்), ஈதல், ஏற்றல், இவை அந்தணர் தொழில்களாம். பால் குறைதலாலும் நூலை மறத்தலாலும் தேவர்க்கு வேள்வி நடவாமையால் மழை பெய்யாது. 'மழை யின்றி மாநிலத்தார்க்கில்லை' என்பர் புலவர். 'ஆபயன்' என்றதற்கு பஞ்ச கௌவியா, அல்லது பஞ்ச திரவிய மென்பாருமுளர். " ஆவினிற் கருங்கலம் அரனஞ்சாடு தல்." அவ்வைந்தாவன கோசலம், கோமயம், தயிர், நெய், பால். அறு தொழிலோர் அநதணர் அல்லது பார்ப்பார் என்று, இருவரும வெவ்வேறு இயல்பின ரென்பதைப் பகுத்தறியாமற் கூறுவாருமுளர். நாயனூர் " அந்தணர் நூற்கும் அறத்திற்கு மாதியா நின்றது மன்னவன் கோல் " என்றதன்பொருள் 'அறத்தார்க்கும அறத்திற்கும் இன்றியமையாதது செங்கோன்மை' என்பதே யாம. ஏனெனில் "அந்தண ரென்போர் அறவோர், மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண் மை பூண்டொழுக லான்" என்று குறளில அந்தணரினி லக்கணம் கூறப்பட்டுளது. அவர் அறஞ்செய்வோர், எவ்வுயிர்க்கும் செம்மையான குளிர்ந்த தன்மை, கருணை, யுடையவர் எனப்பட்டுளது. புறப்பாட்டு அடிகளில் 'மறைநவி லந்தணர்', 'அந்தி அந்தணர் அருங்கடனிறுக்கு முத்தீ விளக்கு', 'சிறந்த நான் மறை முனிவர்', 'ஆவும் ஆனியற் பார்ப்பனமாக்களும்', ஆன்ற கேள்வி யடங்கிய கொள்கை நான்மறை முதல் வர்' 'அறம்புரி கொள்கை நான் மறை முதல்வர்',

அழல் புறந்தரூஉம் அந்தணர்', 'அறம் அறக்கண்ட நெறிமா ணவையத்து முறைநற் கறியுநர்' 'கேள்வி முற்றிய வேள்வி யந்தணர்', 'ஆக்குரற் காண்பின் அந்தணாளிர் நான்மறைக் குறி', 'வேற்றோராயினும் நோற்றோர்க் கொழியும் ஏற்ற பார்ப்பார்க் கீர்ங்கை நிறையப் பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து என்று வருதலால் அந்தணரும் பார்ப்பாரும் வேறென்று விளங்குகின்றது. பார்ப்பார் பசுப்போன்றவர், யாசகர் என்பதும், அந்தணர் மறையோர், நெறி தவறுதவர், எவ்வுயிர் மீதும் கருணையுடையவர் என்பதும் வெளிப்படை. உயிர்மேற் கருணை பார்ப்பார்க்கில்லை என்பது ஆடு, குதிரை யல்லாமல் புருஷமேதமும் பௌண்டிரிக யாகமுஞ்செய்தமையாற் றெளிவுறும். அவர் தம்முடம்பினை யோம்புதலிற் சதுரர். செந்தண்மை பெறுது அவர் தன்னயம் பார்ப்பாராதலால் நச்சினார்க்கினியர் அவரை 'அந்தத்தை அணவும்' அந்தணரென்று மயங்கக் கூறினர். கடவுளும் 'அறவாழி, அந்தணன்' என்று துதிக்கப்பட்டுளார். 'அந்தணாளர்க் கரசு வரைவின்றே' என்பது பார்ப்பாருக் கன்று. "நூலே கரகம் முக்கோல் மணை" இவை ஆயுங்காலை அந்தணர்க்குரிய என்பதனுல் உலகியல் விட்டு நீங்காத இல்லறத்துறவிகளையும், பற்றினை முற்றிலு முனிந்த முனிவர்களையும் உணர்த்திற்றென்பர். பன்னிருவாயில்களில் (தூதர்களில்)

"தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்,
பாணன், பாடினி, யிளையர், விருந்தினர்,
கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்,
யாத்த சிறப்பின் வாயில்க ளென்ப."

பார்ப்பார் ஒருவகை. அவர்தொழில் இச்சூத்திரத்திற் காணப்படும்.

" காமநிலை யுரைத்தலும், தேர்நிலை யுரைத்தலும்,
கிழவோன் குறிப்பினை யெடுத்தனர் மொழிதலும்
ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்,
செலவுறு கிளவியும், செலவழுங்கு கிளவியும்
அன்னவை பிறவும் பார்ப்பார்க் குரிய."

தலைவன் மாட்டும் தலைவிமாட்டுந் தூது செல்வோர் பார்ப்பார். அத்தொழில் இன்றும் நிகழ்கின்றது. சிலப்பதிகாரத்தில் மாடலன், கௌசிகன், தேவந்தியும், பெருங்கதையில் இசைச்சன், யாப்பியாயினி, சாங்கியத்தாய், வயந்தகன், யூகியும் பார்ப்பனரன்றோ? இவற்றால் அந்தணர் வேறு, பார்ப்பார் வேறு என்பதை யறிக.

அறு தொழிலோர் என்பது வணிகரையும், வேளாளரையுங் குறிக்குந்தொடர் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. 'அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்'' என்ற புறத்திணைச் சூத்திரத்தில் 'இரு மூன்று மரபி னேனோர் பக்கமும்' என்ற அடிக்கு இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் அடியிற் காண்கின்ற வழி உரை செய்துளார்:

ஆறு மரபினையுடைய வணிகர் வேளாளர் பக்கமும் என்றனர்.

வணிகர்க்கு உரிய ஆறு பக்கமாவன:—ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வாணிகம், நிரையோம்பல், என்பன.

வேளாளர்க்கு உரிய ஆறு மரபாவன:—உழவு, உழவொழிந்த தொழில், விருந்தோம்பல், பகடுபுறந் தரல், வேட்டல், வேதமொழிந்த கல்வி யோதல் என்பன.

"நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பாலொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே"
—(புறம், 183.)

இனி வேளாண் மாந்தர்க்கு வேட்டலொண்ணா தென்பார் 'வழிபாடு' ஒன்றனைக் கூட்டி எண்ணிட்டு, நாலடியாரில் அதிகாரம் 15, குடிப்பிறப்பு, செய்யுள் 3, ஐக் காட்டுவர்.

"இருக்கை யெழலு மெதிர்செலவு மேனை
விடுப்ப வொழிதலோ டின்ன-குடிப்பிறந்தார்
குன்ற வொழுக்கமாக் கொண்டார் கயவரோ
டொன்ற வுணரற் பாற்றன்று."

முடியுடைமன்னர் விழையக் காவிதிப் பட்டம் பெற்று அவ்வரசர்க்கு மகட்கொடைக்குரிய வேளாண் மாந்தர் தண்டத்தலைமை பெற்று உழுவித்துண்ணலே மரபாக வுடையராதலின் அன்னோர் பிறர்க்கு வழிபடு பெற்றி யுடையராகார்." இது இளம்பூரணம். நச்சினார்க்கினியத்தில் வருமாறு: "இனி வேளாளர்க்கு வழிபாடு கொள்ளாது. பெண் கோடல்பற்றி வேட்டல் உளதென்று வேட்டலைக்கூட்டி ஆறென்பாருமுளர். வழிபாடு இருவகை வேளாளர்க்கும் உரித்து, இனி வேட்டலைக் கூட்டுவர் அரசரால் சிறப்பெய்தாத வேளாளர்க்கே வழிபாடு உரித்தென்பர்."

இவற்றால் அறு தொழிலோர் அந்தணர் பேர் கொண்ட பார்ப்பார் மட்டுமல்லர், வணிகரும் வேளாளருமே யென்பது தெற்றெனத் தெளிவுறும்.

இது நிற்க, மன்னனது காவல் ஏற்படாவிடின் நாடுகளில் ஆகும் பயன்களெலாம், காலேசமும் விளையுளும் வினையவுஞ் சுருங்கும். இல்வாழ்வானுக்கு உழவு தலையான கருமம். உழவு கால்நடையின்றி நடவாது. கால் நடையின்றி உழவு ஒழிந்தால் கழனி விளைவு குன்றும். மனிதரீாக்கத்திற்குரிய வணைத்துங் கைகூடவில்லையானல் நாகரிகம் பாழ்படும். ஒவ்வொரு தொழிலாளரும் தத்தம் நூலை மறப்பர். அறிவர் அறநூலை ஓதார். வணிகர் பொருள் நூலைப் பாரார். வேளாளர் பயிர் செய்பனுவலைப் பகரார். கம்மியர் சிற்ப நூலைத் திறவார். ஓவியர் சித்திர நூலைக் கைபிடெடார். காருகர் நெசவு நூலை நோக்கார். இவ்வாறு உழவு, இல்லமைப்பு, முயற்சி, உருவெழுதல், வாணிபம், வித்தைக்குரிய நூல்களை மறப்பதற்கு முக்கிய. காரணம் காவலன் காவாததனல் ஒவ்வொரு தொழிலரும் தம்மைப்பாது காத்தலிலேயே காலம் போக்குதலாம். இவ்வுண்மையை ஒருரிற் போர் நிகழுங்காலத்தில் நீங்கள் எளிதி லுணரலாம் என்று தப்பிலி கூறினதும் மங்கிலியும் வியப்பிலியும், “ தந்தையே, தாங்கள் தந்த விரிவுரையால் ஒன்று வெளிப்படுகின்றது. திருக்குறளுக்குத் தமிழர் வழக்கத்தையும் ஒழுக்கத்தையும் நாகரிகத்தையும் விளக்கும் தமிழ்மகனுரை கிடைக்கவில்லை போலும். அது கிடைப்பின் பொருந்தாத புத்துரையே இதுவரை வெளி வந்துள்ள பதிப்புரையென்று துலங்கும். இறைவ னருள் புரிவாராக” என்றனர்.

## கூறு X.

## மானம்.

தத்தம் நிலைமையிற் றாழாமற் காத்தலும் பழி நாணுதலும் சொன்ன சொல்லிழுக்காமற் செய்தலும் இவைபோல்வன மானிகளின் குணங்களாம். செல்வர், வறிஞர், ஆடவர் மாதர், விழுக்குடி தாழ்குடி என்ற வேறுபாடுகள் மானிகளிடங் கிடையா. 'மானம் படவரின் வாழாமை முன்னினிதே' என்றார் நாலோரும். மாந்தர் நிலையினிழிந்தக் கடை தலையினிழிந்த மயிரனையர் என்றார் பொய்யில் புலவரும். மானிகள் கவரிமாவை யொப்பர். அது தன் மயிரையிழக்க நேரிடின் வாழாது. அது போன்று மானிகள் மானம் படவரின் உயிர் நீப்பர். செல்வரின் இறுமாப்புச் செயல்களைக் காணின் மானிகள் மனங்கனலும். மானிகள் வறுமையால் எலும்பாயுகினும் தம்மையறியாதவரிடம் தம் பாடு உரையார். கடையர் காய் பசியின் பொருட்டு மானத்தை இழப்பர். இடை மக்கள் இன்மை யஞ்சி மானத்தை விடுப்பர். தலை மக்கள் சொற்பழி யஞ்சி மானங்காப்பர். செல்வர் தாம் நல்லர், பெரிதளியரென் றெண்ணி நல்கூர்ந்தாரை எள்ளி சிறுநோக்கு நோக்குங்கால் அவர் மனங் கொதிக்கும். யானையை வெற்றிகொண்ட புலி தன்னாற் கொல்லப்பட்ட விலங்கு இடப்புறம் வீழின் அது அதனை யுண்ணாது என்பர். புலி பசித்தாலும் புல்லைத் தின்னாதன்றோ? அரசருடைய குணத்திற் சிறந்தது மானம். மானமிழந்து பிழைப்பவர் யாசகர். இவர் உடல் வலியுடையரேனும் மடியினால் சுகவாழ்வு பெற வுன்னிப் பிச்சை யெடுப்பர். வணிகர் ஊதியம்பற்றிப்

பொய் சொல்லுவர். அது போன்றே கம்மியரும் பொருளீட்ட விரும்பிப் பொய்புரைப்பர். பொய்க்கரி யாளரும், பொய் பெய்து வழக்கெடுத்துரைப்போரும் உண்மையில் மானிகளல்லர். எத்தொழிலினுஞ் சிறந்த வேளாண்மையைக் கையாள்வாருக்குப் பொய்யுரைக்கக் காரணமில்லை. மண்டலமாக்கள் போன்று உழவரும் மானத்தாற் பிழைப்பர். விசுவாமித்திரர் பலவழியிற் றூண்டினும் பெருநில மன்னராகிய அரிச்சந்திரன் சுதியிழக்கினுங் கட்டுரை யிழக்கிலேம் என்றார். வரிசை யறிந்து கொடாத மன்னர் புகழ்பெறார். தரந் தெரிந்து புலவரைப்போற்றாத புரவலரைப் புலவரும் போற்றாரென்பது புறப்பாட்டு 107 கூறும்.

“பாரி பாரி யென்று பலவேத்தி
யொருவர் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டு ஈண்டுலகு புரப்பதுவே

கிரேக்கரில் ஸ்டோயிக்ஸ் என்ற தத்துவ ஞானி களும், அவர் கொள்கையினைக் கடைப்பிடித்தவரும் மானத்தைப் பாது காத்தவர். மானங்கெடவரின் உயிர் துறந்தனர். 'உரோமரும் அக்கொள்கை யுடையவரே. புருட்டசு, கேற்றோ முதலானவர் மானமிழக்கும் நிலை மையுற்றிடுமென்ற வமயத்தில் தற்கொலை செய்தன ரென்பதைச் சரித்திரத்திற் காண்க.

பெண்கள் தங்கள் கற்பிற்கு இடையூறு வருமள வில் கழுத்தில் நாணிட்டுச்சாதல் தமிழக வொழுக்கம். மடலூர்தல், அல்லது மடலேறுதல் ஒருமைப்படாத தலைவிநிமித்த மென்று சங்க நூல்கள் பகரும். திரு மங்கையாழ்வார் சிறிய திருமடல், பெரிய திருமட

லென்று இரண்டு திருமடலகள் தந்துளார். நாணுத் துறவுரைத்தல், (குறள், 114) என்ற பகுதியில்

"காமமுழந்து வருந்திஞர்க் கேமம்
மடலல்ல தில்லை வலி."

"கடலன்ன காமமுழந்தும் மடலேருப்
பெண்ணிற் பெருந் தக்க தில்."

"மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
மடலொல்லா பேதைக்கென் கண்."

"நோஞ வுடம்பும் உயிரும் மடலேறும்
நாணினை நீக்கி நிறுத்து."

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்ருர் ஏறு மடல்."

என்ற ஐந்து குறள்களில் மடலூர்தலைப் பற்றிக் கூறியுளார். வரைவின் மகளிர்க்கும், மனைவிழைந்த பெண்வழிச் சேறுமாந்தர்க்கும் மானமில்லாத நடையுண்டு. கள்ளுங் கவறும்போல பொருட்பெண்டிர் தொடர்பு நீக்கப்படும். நல்நுதலாள் பெட்டாங்கு ஒழுகுபவர் நட்டார் குறை முடியார், நன்று ஆற்ருர். அவர் வினையாண்மை வீறு எய்துதலின்று. அவ ராண்மையினும் நாணுடைப் பெண்ணே பெருமை யுடைத்து என்ருர் செந்நாப்புலவரும்.

வியப்பிலி, "மானத்தை விற்றுப் பொருளீட்டு வோர் வேசியரென்று இகழப்படுவர். ஆசி கூறி உழைப்பின்றி யாசகஞ் செய்யுமக்களுக்கு மானங்கிடையாது, எனினும் மதிக்கப்படுகின்ருர். பொருள் விழைந்து மன்றத்திற் பொய்யே பேசும் வழக்கறிஞரும் புகழப்படுகின்ருர். பல குடைநிழலுந் தங்குடைக்கீழ் காணு மலகுடை நீழலவர் மதிப்புப் பெறுகின்றிலர்.

இவர் தாளாண்மை செய்து விருந்தோம்புகின்றனரன்றோ? எவ்வகுப்பினரும் எவ்வகைப் பிழைப்பும் இவர் தாள்மடங்கி னில்லையென்றிருந்தும் இவர் பெருமை பிறங்கிற்றிலது. மாணிகளிலெல்லாம் மிக்க மானமுடையார் உழவரன்றோ? பிதற்றுவார்க்குப் பெருமையும், இலமென்றசை யிருப்பார்க்குத் தூசும்பட்டும், தொழுவார்க்குப் பொருளும், பகடு நடந்த கூழினைப் பல்லாரோடுண்ணும் பயிரிடுவோருக்குப் பழியும் போலும்! இதுவோ உலக இயற்கை'', என்று வியந்தனன்.

"அப்படியன்று. எத்தொழில் செய்யினும் நுண்ணறிவுங், கல்வியுமுடையார் சிறப்பர், கற்றல் கேட்டலில்லாத மாக்கள் சிறப்படையார். யான எடுத்துரைத்தது பலருடைய சீருஞ் சிறப்புமன்று. மாணிகளின் சிறப்பையே'' என்று தப்பிலி கூறினர். அன்றியும் எந்நிலைமையிலுள்ளாரும் மாணிகளாயிருக்கலா மென்றும் எடுத்துரைத்தனர்.

> "கற்பக் கழிமடமஃகும், மடமஃகப்
> புற்கந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணரும்,—
> கோளுணர்ந்தாற்
> தத்துவ மான நெறிபடரும் அந்நெறி
> இப்பா லுலகத் திசைநிறீஇ, யுப்பா
> லுயர்ந்த வுலகம் புகும்''

என்றார் விளம்பி நாகனர். "நல்லம்யாமென்னு நடுவு நிலைமையாற் கல்வியழகே யழகு'' என்றார் சமண முனிவரும். புலமை வாய்ந்த பெரியோர் பாவலரையும் பொருட்படுத்தாத மாணிகளென்று புறப்பாட்டினல் விளக்கினேன். இவற்றையுற்று நோக்குவாய் என்று

தப்பிலி விரித்துரைத்தும், மாண்பிலி, "உண்மை யுறுதிப் பாடுடைய மானிகட்கு வறுமையே வரும் பயன்போலும்" என்றனன்.

மங்கிலி, "அப்பா, திருவேறு, தெள்ளியராத லும் வேறு. திருவுற்றாரிற் பலர் மானம் விற்கும் வணிகராய் விளங்குகின்றனர். தெள்ளியர் பெரும் பான்மையும் பழிநாணுமானிகளாய்த் திகழ்கின்றனர். இவ்வுண்மையை மாண்பிலி பகுத்தறியாதது பாவம். உலகம் ஆவிற்கு நீர் என்று ஏற்கின்ற பலரையும் எள்ளும், இயற்றுகின்ற சிலரையும் விள்ளும. இதுவே உலகத்தியற்கை" என்றனள்.

அதற்கு "உலகம பலவிதம. ஒழுக்கமே சிறந் தது, ஒழுக்கத்திற் சிறநதது தவவொழுக்க"மென்று தப்பிலி கூறினர்.

---

## கூறு XI

## தவம்.

"தவவொழுக்கஞ் சிறநததென்று யான் கூறின மையால் தவமென்பதென்னை? தவசிகள் யார்? தவத் தின் பயன் யாது? என்று நீங்கள் கேட்கலாம். விளக்குவல்" என்றனர் தப்பிலி.

உலகவழக்கில் தவமென்ற கிளவி நோற்றலென்ற பொருளிற் காணப்படுகிறது. நோன்மை அல்லது விரதம் என்பது ஐம்புல நுகர்ச்சியைச் சிறிது அல் லது நெடியகால வளவில் நீக்கியிருத்தலாம். 'ஒறைந் துங் காத்தல்' அதுவேயாம். ஒன்றைக் கொல்லாதிருத் தல் நோன்மை யென்றார் நாயனாரும்.

தவஞ்செய்வார் கானகம் பொருந்தி நோற்பா ரென்பர். தவமுனிவர்கள் ஆரணியத்திலே வதிந்தன ரென்று புராண இதிகாசங்கள் கூறும். காசிப முனிவர் கானகத்தேயுறைந்து தவஞ்செய்தன ரென்றும், வில்லி சபாஜகிய அர்ச்சுனனும் அவ்வாறே நோற்றன னென்றும் நூல்களிற் காணலாம். தவநிலை இஃதென்பதை வில்லி கூறுகின்றார்

ஒருதாளி னமிசைநின்று நின்றதாளி னுருவினமே
லொருதாளை யூன்றி, யொனறங்
கருதாமல் மனமடக்கி விசும்பினேடுங் கதிரவனைக்
கவர்வான் போற் கரங்க ணீட்டி
இருதாரை நெடுந்தடங்க ணிமையாதே ராயிரங்
கதிருந் தாமரைப் போதென்ன நோக்கி
நிருதாதி பரின்மனுவாய்த் தவஞ்செய்வா ரினிகர்
இவனுக்கார் கொலெனா நிலைபெற்றானே.''

பருகுநீர் துறந்து காற்றும் வெவ் வெயிலும்
பாதபங்களின சினை யுதிர்ந்த
சருகுமே யொழியக் காய்கனி கிழங்குந்
தானினி தருந்துதல் தவிர்ந் தான
உருகுமா மனத்தை நாமுவர் திருத்தற்
குறைபதி யாக்கி, நம்மிடத்தே
செருகினு லுணர்வை யாவரே யிவன்போற்
செய்தவஞ் சிறந்தவ ரென்றான்.''

நின்றுபெருந் தவமுயல்வோர் தாங்கள் கொண்ட
நினைவொழியப் புறத்தொன்று நினைவரோ சொல்.''

தவமே தனமென்பார் நூலோர். தவத்தின் பயனைப்பற்றிப் புலவர்கள் பலவாறு புகன்றுளார். இராமாயணத்தில் இவ்வடிகள் வருகின்றன.

"அருஞ்சிறப்புதவ, நல்லறிவு கைதர செய்தவம்."
"வேண்டின வேண்டினர்க் களிக்கு மெய்த்தவம்."

காசிப ருபதேசப் படலத்தில்

"தவந்தனின் மிக்க தொன்றிலை, தாவில்சீர்
தவந்தனை நேர்வது தானுமில்லை யால்
தவந்தனின் அரியதொன் றில்லை, சாற்றிடில்
தவந்தனக் கொப்பது தவம தாகுமே"

என்றும,

"பத்திமை நெறியொடு பயிற்றி மாதவ
முத்திபெற் றானடி முன்னுற்றோர் தமை
இத்துணை யெனலரி திருமையும் பெறு
மெய்த்தவர் மாலொடு விரிஞ்ச ஞதியோர்.

"உடம்பினை யொறுத்து நோற்பா ருலகெலாம்
வியப்ப வாழ்வர்,
அடைந்தவர்க் காப்பர், ஒல்லார்க கழிவுசெய்
திடுவர், வெஃகு
நெடும்பொருள் பலவுங்கொள்வர், நித்தரா
யுறைவர்."

"அப்பெருந் திருமக *ஞற்று நோன்பிஞல்
தப்பரும் விதியினைத் தணர்ந்து கூற்றுவன்
துப்பினை யகற்றியே தொலைவு கண்டபின்
எப்பொழு தத்தினு மிறப்பின் ருயிஞன்"

என்றும், தவவலிமையைப் புகழ்ந்து தவஞ்செய் தாரிற் பெரியார் திருமால், பிரமன் என்றும், தவவலி யால் மார்க்கண்டேயர் கூற்றனையும்வெற்றி கொண்டன ரென்றும் எடுத்துக்காட்டி யிருப்பதைக் கண்ணுறலாம்.

---

*மார்க்கண்டேயன்.

"கூற்றங் குதித்தலுங் கைகூடும், நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு."

என்றார் திருவள்ளுவப் பெருமானும்.

பொய்த்தவம் படிற்றொழுக்கம். தவவேடம் பூண்டு மக்களை மயக்குதல் 'பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்தற்றாக்கும்'. அன்றியும், "புதர் மறைந்து வேட்டுவன் புள்சிமிழ்த்"தது போலும்.

மெய்த்தவசிகள், "பொன்றிடினு நீ யறியப் பசுத் தோல் போர்த்துப் புலிப்பாய்ச்சல் பாய்வரோ?" பாயார், திண்ணம்.

தவசிகளும் நோன்பினரும் மனவொருமைப்பட்டு நினைத்ததை முடிக்க விடாமல் முயலுவர். தத்தம் கருமம், தொழில் செய்வார், தவஞ்செய்வாரென்பதனால் ஒவ்வொரு உயிரும் தவஞ்செய்யுமென்றாயிற்று. தவமுந் தவமுடையார்க்காகுமென்றதனால் அவமே நேரத்தைப்போக்காமல் தங்கருமத்தைச் செய்பவர் தவசிகளேயாவர். அன்னார் உடலொறுத்தல் மனப் பணிவு பற்றி யென்பர். கொல்லாவிரதம் பூண்டு புலாலை மறுத்து உயிர் வாழ்பவரும் நோன்பிகளாவர். தவத்திற்கு அடையாளம் யாதெனின் உற்றநோய் நோன்றலும், உயிர்க்குறுகண் செய்யாமையும் என்பதாம். ஆசை மிகுதியால் அவஞ்செய்தலியல்பு. அவா வொழித்தல் தவவொழுக்கத்திற்கு அடிப்படை. தமக்குரிய கடமையைச் செய்யாமல் பேராசைகொண்டு படிற்றொழுக்க மேற்றுப் பிறர் பொருளை வெளவுதல் கூடா வொழுக்கமாம். கடமையைத் தவறாமற் செய்ய முன் வருபவருக்குத் துன்ப மேலிடும். அடினுமாவின்

பால் தன் சுவை குன்றாது அன்றோ? தம்முயிர் தமக்கு உரித்தாகும்படி நல்வினையை இடைபறுவாறுசெய்கின்றவரை உலகமெல்லாந் தொழும். தத்தங்கடமையினைச் செய்யாதவர் பலராதலின் வறுமையுற்றோரும் பலரே யாவர். தங்கருமத்தை வழுவாமற் செய்கின்றவர் சிலராதல்பற்றி அருள் பெறுபவருஞ் சிலரே யாவர். காப்பது விரதம்.' உயிர்களுக்குத் தீங்கு செய்யாமற் காப்பாற்றுவதே விரதமாகும். மனமாசகற்றிச் செய்யுங் காரியங்களைச் செவ்வைபாகச் செய்து மெய்ப்பொருளைப் பெற்று இன்பமுறுதலே தவமென்றுரைக்கலாம். உண்மைபாகக் கடமையைச் செய்து முடிப்பவர், மெய்த்தவசிகள், 'பண்பல்ல பாராட்டார்

இங்ஙனம் தவத்தைபபற்றி தப்பிலி யுரைத்தவுடன் மங்கிலி, 'தவஞ்செய்வார்க்கு வேடம் வேண்டுவதில்லையே. கோலும் புல்லுந் தோலும் பூண்டு ஏன் துயருறுகின்றனர்' என்று வினவ, வியப்பிலி, "இதென்ன கேள்வி. பலவாறு உலகப்பற்றினை பொழித்ததற்கு அறிகுறியாய்க் கோவணந்தோடு திரிவார் சிலர், ஊனைச் சுருக்குவார் சிலர், ஊனையொழிப்பார் சிலர், நீரையே பருகுவார் சிலர், மனமடங்கி யொருமைப்படுவதற்கு இவற்றினைக் கைக்கொள்வர். இவையன்றி கல்வி கேள்வி ஞானத்தால் மனவுறுதி பெறுவார் சிலர். எவ்வழியானும் தீமையை யகற்றி நன்மையையே நாடி நலமாக்கு மனவுறுதி யுடையவர் தங்கருமத்தைச் செய்யுந் தவசிகளாவர்" என்றனன். பண்பிலி, 'என் இளவலே, நீ சொல்வது சரி, 'உற்றநோய் நோன்றல்' என்பதால் மக்கட் பிறவியே பிணி. அதனை யொழிக்கு முறை பலவாயினும் மக்கட் பிறவி பிணியாகாது. மக்கட்

பிறவி அரிதினுமரிது. அது கொண்டு புத்தேளிராவ தற்கு முயற்சி செய்பவர் துறவியுந் தவசியுமாம்,' என்று கூற, தப்பிலி, "மக்கட் பிறவி பிணி யென்பாரும், அது உறுதுணை யென்பாருமுளரென்று யான் முன்னரே கூறியுளேன். பிறருக்கு இடர் செய்யாமல் இனிமையாற்றுதலே முதற் கடமை. அதுவே தலையான தவம். இத்தவத்தினை வைகலுஞ் செய்ம்மின். நீங்கள் பேரின்ப மெய்துவீர்கள்' என்று விடை கூறி முடித்தனர்.

---

## கூறு XII.

## உலகம் தழுவல்.

"உலகந் தழீஇய தொட்டம், மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு."— குறள்.

" நிலந்தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்க முலகம்."

என்றனர் தொல்காப்பியனார்.

உலகமென்பது பல பொருளொரு சொல்லாய் நிலத்தையும், உயிர்களையும், ஒழுக்கத்தையும் உணர்த்தி நிற்கும். நிலத்தில் வாழும் உயிர்களில் சிறந்து விளங்குவது ஒழுக்கமாதலின் நல்லொழுக்கமுடையாரே உயர்ந்தோராவர். ஆதலால் உலகமென்பது உயர்ந்தோரையே குறிக்கும். உயர்ந்தோர் சிறந்த ஒழுக்கமுடையவரே. நல்லொழுக்கம் உடைமை குடிமை. அது நன்றிக்கு வித்தாகும். உயர்ந்தோர் வழுக்கியும் தீயன வாயாலுஞ் சொல்லார். விழுமியோர் கடமை அறிவு கொளுத்துதல். உலகத்திற் படியாதவர் பலராயிருக்கும் அக்குற்றத்திற்குப் பொறுப்பாளர் படித்தவரே.

கற்றறியாதாரைக் கற்றறியச் செய்தல் கற்றோர் கடனன்றோ? கல்லாதவரை வெறுக்காமலும், எள்ளாமலும், அன்புடன் ஏற்று அன்னாருக்கு அறிவு விளக்கங் காட்டுதலும் அறிவாளிகளின் தகைமையே யாம். ஆதலால் மக்களே, நீங்கள் பல அறிவு நூல்களையும் ஞான நூல்களையும் கற்றபோதிலும் உலகத்தை யொட்டி யொழுகுதல் முறைமையாம் 'ஒப்புர வொழுகு' 'ஊரோடு ஒக்க வாழ்' என்றார் மூதாட்டியும். திருவள்ளுவரும் அதுபற்றியே,

> "எவ்வ துறைவ துலகம் உலகத்தோ
> டவ்வ துறைவ தறிவு."

> "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
> கல்லா ரறிவிலா தார்."

உலகத்தைத் தழுவி நடக்க அறியாதவர் கற்றறி மூடரென்று கூறியுளார். உயிரினு மோம்பப்படு மொழுக்கம் நுண்மாண் நுழைபுலமுடையாரும் உலகத்துடன் பொருந்தி நடக்கும் நடக்கையேயாம். படிற்றொழுக்கம் பாழ்படுத்தும். ஒழுக்கத்திற்குக் கட்டளைக் கல் செய்வினையேயாம். கணை கொடிதாவதும், கொடிய யாழ் செவ்விதாவதும் அததன்வினையினாலன்றோ? கணை புண்படுத்தும். யாழ் இன்னிசைதரும். குழ லினிது யாழினிது என்ப.'

> "மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
> பழித்த தொழித்து விடின்."

உயர்ந்தோரால் குற்றமென்று கண்டிக்கப்பட்ட தீய வொழுக்கத்தை நீக்கலே தகுதி. தலைமயிரைப் பறித்தலும் அதனைச் சடையாக்கலும் அல்லது வளர்த்தலும் வேண்டுவனவல்ல. இவை வேடமாதலின்

வேடம் வேண்டுவதில்லை, நல்ல ஒழுக்கமே சிறந்தது, என்பர் ஒழுக்க நூலோர்.

வியப்பிலி, "ஒழுக்கஞ் சிறந்தது தான். உலகில் ஒரு நூற்றுவரில் ஒன்பத்தொன்பதின்மர் அறிவிலிகளென்று கார்லயில் சொல்லியிருக்கின்றனரே. அறிவிலிகளைத் தழுவி நடத்தல் அரிதினுமரிதே. அவ்வாறாயின் உலகந்தழுவுதல் இயலாதன்றே" என்றனன்.

தப்பிலி "நீ புகலுவது உண்மையே. உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே என்பதனால் அறிவிலிகளைக் கூறவில்லை. அறிஞரையே தழுவி நடத்தல் வேண்டும். பெரியாரைத் துணைக்கொண்டு ஒழுகுதல் அறிவாளிகள், அறிவிலிகளின் கடமை. அறிவாளிகள் அறிவிலிகளைத் தம்மைப்போன்று அறிவுடையராகும்படி கற்பித்தல் தகைமை. அங்ஙனஞ் செய்யாதொழியின் அறிவாளிகள் தம் கடமையை முற்றிலுஞ் செய்யாதவரே யாவர்" என்றனர்.

மங்கிலி, "மூத்த அறிவுடையார் கேண்மையின் திறனறிந்து தேர்ந்து அவரைப்பேணித் தமராகக் கொண்டு ஒழுகுதல் உலகத்தவரின் முறைமையாம். அறிவிலிகளுங் அறிவாளிகளுஞ் சேர்ந்ததே உலகம். இருவகையாரும் தொந்தமுடையவரே. ஒருவகையார் மற்றொரு வகையாரின்றி வாழ்தல் முடியாது. பெரியாரைப் போற்றாமலும் பெரியார் சொற் கேளாமலும் நடப்பவருக்குப் பேராவிடும்பை நேரிடுதலுமன்றி அவருயிர்க்குங் கேடுவரும்.

எரியாற் சுடப்படினு முய்வுண்டாம், உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்'

என்பது வாயுறை வாழ்த்து" என்றனள்.

பண்பிலி, " தங்காய், பெரியார் யார்? மேலோர் எனின் மேலோர் யார்? கீழோர் யார்? பிறப்பினால் பெருமையுஞ் சிறுமையும் ஏற்படுமோ? சூத்திரர் கீழோரென இகழப்படுகின்றனர். தொல்காப்பியத்தில் சூத்திரரென்ற சொல் வழங்கப்படவேயில்லை. மக்களை நாற்பாலாகப் பிரித்தவர் நான்காவது வகுப்பில் வேளாளரை அமைத்துளார். வேளாளர் அறிவிலிகளா? வேளாளரும் உலக மக்களிலொரு பகுதியரல்லரோ? அன்பார்ந்த தந்தையே, உண்மையைத் தெரிவிக்க விரும்புகின்றேன்" என்று வணங்கினன்.

தப்பிலி, " பண்பிலியின் கேள்விகளுக்கு விடையளித்தல் எளிதன்று. ஆயினும் முயலுவேன். அறிவிற் சிறந்தாரே பெரியர். குலத்தால் பெரியரிலர். பணிவும், பெருமித மின்மையும், அற்றம் மறைக்கும் பெருமையும் பெரியாரிடமே காணப்படும. தாயின் மடி வழிப் பிறந்த மக்களனைவரும் சூத்திரரே. கல்விகற்ற யாவரும் இருபிறப்பாளரே. பிறந்த நிலைமையில் கல்வி கல்லாமலும் கேள்வியால் செவி தொளைக்கப்படாமலும் இருப்பவரே சூத்திரராவர். அஃதன்றி பிறப்பினால் பெரியராதல் மித்தை. இதனைக் குறித்தே,

> மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
> கீழல்லார் கீழல் லவர்"

என்று தமிழ் மறை கூறிற்று.

> " பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
> சிறப்பின பாலாற் றாயுமனந் திரியும்;
> ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
> மூத்தோன் வருக வென்னா தவருள்

அறிவுடை யோனா றரசுஞ் செல்லும்;
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும
கீழ்ப்பா லொருவன கற்பின
மேற்பா லொருவனு மவன்கட் படுமே"

என்றார் நெடுஞ் செழியனாரும்.

திரியழற் காணிற் றொழுவா, விறகின
எரியழற் காணா ரிகழ்ப—ஒருகுடியிற்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமை பாராட்டும் உலகு"

என்றனர் நான்மணிக் கடிகையாரும்.

ஆதலினால் கற்றாரனைவரும் உயர்குலத்தோர்; கல்லாதாரனைவரும் கீழ் குலத்தோர், அல்லது சூத்திரர்; இதுவே உண்மை. இதனை யுட்கொண்மின். நீங்கள் நாடோறுஞ் சீருஞ் சிறப்பும் பெற்று விரிவுற்ற மனத்தராய், இன்பமே எந்நாளும் பெற்று விளங்க எல்லாம் வல்ல இறைவனருள்க. நலம், நலம்" என்று தப்பிலி முடித்தனர்.

"உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்"

உ

ஆ. மாணிக்கம்,
மணவழகு தமிழகம்.
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி | திருத்தம் |
|---|---|---|
| 13 | 13 | பூசனை |
| 16 | 2 | மணிவாச |
| 40 | 7 | செய்வர் |
| 58 | 15 | சேரு |

உ

ஆ. மாணிக்கம்,
மணவழகு தமிழகம்,
செவ்வாய்பேட்டை, சேலம்.